ஓசை: 25 குரல்: 163 புதன்கிழமை 24 நவம்பர் Wednesday 24th November 2021 Postbox : 1615 Phone: 011 7778700, 0117322760






www.facebook.com/Thinakkural | www.twitter.com/ThinakkuralNews | email: daily@thinakkural.lk | www. thinakkural.lk

# தினக்குரல்

An Independent Daily Voice In Tamil

Registered in the Department of Post of Sri Lanka Under No.QD/151/ NEWS/2021

25th ANNIVERSARY

பக்கம்: 12 | விலை: 30




## பயணிகளுடன் புறப்பட்ட இழுவைப் படகு உடைந்து, கவிழ்ந்தது



# கிண்ணியாவில் பேரவலம்

### 4 சிறுவர்கள் உட்பட 6 பேர் பலி ; விண்ணைப் பிளந்த அலறல்கள்

### சோகத்தில் மூழ்கிய கிண்ணியா; கிளர்ந்தெழுந்த மக்கள்

என்.லெப்ரின்ராஜ், கத்தளாய், மூதூர், தோப்பூர், முள்ளிப்பொத்தனை, தம்பலகாமம், சீனக்குடா, உவர்மலை, காரைதீவு நிருபர்கள்

திருகோணமலை, கிண்ணியாகுறிஞ்சாக்கேணி ஆற்றில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை பயணிகளை ஏற்றி சென்றுகொண்டிருந்த மோட்டார் இழுவைப் படகு உடைந்து, கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த ஏழு பேர் நீரில் மூழ்கி மரணமான சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.


நேற்றுக் காலை 7.30 மணி அளவில்

பக்கம் 04

## தௌபீக் எம்.பி.யின் வீட்டின் மீது மக்கள் கடும் தாக்குதல்

### பல பகுதியிலும் ஆர்ப்பாட்டம்; கடைகள் பூட்டு





படகு விபத்தில் பலரும் உயிரிழந்த சம்பவத்தால் ஆத்திரமடைந்த கிண்ணியா மக்கள் , திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக்கின் இல்லத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

திருகோணமலையில் இழுவைப்படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் மாணவர்கள் உள்ளிட்ட பலர் உயிரிழந்த சம்பத்தைய டுத்து கிண்ணியாவில் பெரும்பாலான கடைகள் மூடப்பட்டு

பக்கம் 04

## கிண்ணியாச் சம்பவம் மனிதப் படுகொலையே

### சட்ட நடவடிக்கை என்கிறார் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

கிண்ணியா படகுப் பாதை விபத்துச் சம்பவத்தை மனித படுகொலைகளாகவே கருதுவதாகவும், இதனால் இந்த

பக்கம் 04

## முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

கிண்ணியாவில் விபத்துக்கு உள்ளான படகுப் பாதை இயங்கிய முறை மற்றும் அதன் சட்டப்பூர்வ தன்மை தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்

பக்கம் 04

## எந்த நேரத்திலும் நாடு முடக்கப்படலாம்

### பிரதி சுகாதார பணிப்பாளர் நாயகம்

க.பிரசன்னா

நாட்டில் கொவிட் தொற்றானது தொடர்ந்து அதிகரித்துச் செல்லுமாயின் வருட இறுதி அல்லது பண்டிகைக் காலப்பகுதிகளில் நாட்டை முடக்குவது ஆச்சரியமான விடயமல்லவென பிரதி சுகாதார பணிப்பாளர்

பக்கம் 05

## நாட்டுக்குத் தீ வைக்க அரசு முடிவெடுத்துள்ளது

### இனவாதம் மட்டுமே துருப்புச்சீட்டு

### லக்ஸ்மன் கிரியெல்ல சாடல்

பா.கிருபாகரன், ந. ஜெயகாந்தன்

பக்கம் 02

## புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு போதைப்பொருள் வர்த்தகர்

### சபையில் கொக்கரித்த அமைச்சர் டக்ளஸ்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

பக்கம் 04



## அமெரிக்க தூதுவராக மகிந்த சமரசிங்க

### எம்.பி.பதவியிலிருந்து விலகுகிறார்

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

பக்கம் 02

## என்னை கொல்ல முயன்ற விடயத்தில் ரணில் தப்பியது மஹிந்தவினால்தான்

### அதனால்தான் விட்டேன் என்கிறார் அமைச்சர் மஹிந்தானந்த

பா.கிருபாகரன், ந. ஜெயகாந்தன்

பக்கம் 02

## யுத்த பூமியை போல் இன்று வடக்கு கிழக்கு பிரதேசங்கள்

### உறவுகளை நினைவு கூர அனுமதி கொடுங்கள்; ஸ்ரீதரன் எம்.பி.



பா. கிருபாகரன், ந. ஜெயகாந்தன்

இறந்து போன அந்த ஆத்மாக்கள் துயிலும் இல்லங்கள் மேலே நீங்கள் சப்பாத்துக் கால்களால் மிதிக்கும் வரை இந்த நாட்டில் அமைதி,சமாதானம்,நல்லிணக்கம்

பக்கம் 04

## எதிரணி முன்வரிசையில் இரு ஊளவாளிகள்!

### ஐக்கிய மக்கள் சக்தி கடும் சீற்றம்

பா. கிருபாகரன், ந. ஜெயகாந்தன்

பக்கம் 02

## புதிய அரசியலமைப்பு வரைவில் எவ்வித இரகசியங்களும் இல்லை

### பிரதமர் மகிந்த ராஜபக்ஷ



பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

புதிய அரசியலமைப்பு வரைவு தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அதில் எவ்வித இரகசியமான விடயங்களும் இல்லை எனவும் தெரிவித்துள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதம் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி, பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட

பக்கம் 02

## இரு நாள் வேலைநிறுத்தம்

### சுகாதார தரப்பு அறிவிப்பு

க.பிரசன்னா

சுகாதார தொழில்நுட்ப வல்லுநர்களினால் கடந்த 17 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு உரிய தரப்பினர் தீர்வினை முன்வைக்காமையினால் நாளை மற்றும் நாளை மறுதினம் மீண்டும் அடையாள வேலை

பக்கம் 04



# இலங்கை வந்துள்ள ஐ.நா. அதிகாரி தமிழ்க் கூட்டமைப்பினருடன் சந்திப்பு

இலங்கை வந்துள்ள ஐ.நா.வின் மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளுக்கான உதவி பொதுச் செயலாளர் நாயகம் மொஹமட் காலித் கியாரி நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன், தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா ஆகியோர் பங்கேற்றனர்.

சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற இச்சந்திப்பில் கருத்து வெளியிட்ட கூட்டமைப்பினர் அரசாங்கம் கொண்டுவர வுள்ள புதிய அரசியலமைப்பு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வாக அமையும் என்ற நம்பிக்கை தங்களுக்கு இல்லை எனத் தெரிவித்தனர்.

அத்துடன், ஏற்கனவே, அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படாமை குறித்தும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

பயங்கரவாதத்தடைச் சட்டம் குறித்த சர்வதேசத்தின் கரிசனைகள் கண்டுகொள்ளப்படாமல் இச்சட்டத்தின் கீழான கைதுகள், அரசியல் பழிவாங்கல்கள் தொடர்கின்றன. தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றனவெனவும் கூட்டமைப்பினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஐ.நா. மனித உரிமைப் பேரவை தீர்மானம் குறித்து எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடையே உள்ளது. அந்த மக்கள் நம்பிக்கை இழக்காத வகையில் தீர்மானத்தை நிறைவேற்ற இலங்கைக்கு ஐ.நா. அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கோரப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ஐ.நா.வின் மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் பசிபிக் பகுதிகளுக்கான உதவி பொதுச் செயலாளர் ஐ.நா. தீர்மானங்களை நிறைவேற்ற இயன்றவரை அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்படும் எனத் தெரிவித்தார் என கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

# நௌபர் மௌலவி உட்பட 25 பேருக்கு எதிரான வழக்கு ஜனவரி 12 ல் மீண்டும் விசாரணை

கு.பிரசன்னா

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நௌபர் மௌலவி எனப்படும் மொஹமட் இப்ராஹிம் நௌபர் உட்பட 25 சந்தேக நபர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் ஜனவரி மாதம் 12 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கானது நீதியரசர்களான தமித் தோட்டவத்த, அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரதிவாதிகள் 25 பேரில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாத வழக்கில் 15 ஆவது பிரதிவாதியிடம் குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டது. 25 பிரதிவாதிகளில் பதினைந்து பேர் குற்றப்பத்திரிகையின் தமிழ் பிரதிகளைவழங்குமாறும், ஒருபிரதிவாதி தங்களுக்கு ஆங்கில பதிப்பை வழங்குமாறும், தமிழ் மொழி தெரிந்தசட்டத்தரணிகளை அவர்கள் சார்பாக அரச செலவில் நியமிக்குமாறும் கோரிக்கை முன்வைத்தனர். அத்துடன் 25 பிரதிவாதிகளில் 12 பேர், வழக்கை தொடர்வதற்கு கால அவகாசம் வழங்குமாறு சட்டமா அதிபர் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதையடுத்து வழக்கு விசாரணையை மீண்டும் ஜனவரி மாதம் 12 ஆம் திகதி முன்னெடுப்பதற்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டது. நாட்டிலுள்ள பல்வேறு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களினால் 250 பேர் கொல்லப்பட்டதுடன் 500 க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர். கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து குறித்த தாக்குதல் மேற்கொள்ளப் பட்டிருந்தது.

# ஆளும் கட்சி எம்.பி.திஸ்ஸவுக்கு சபாநாயகர் கடும் எச்சரிக்கை

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

பெண்களை அவமரியாதைக்கு உட்படுத்தும் வகையிலான வசனங்களை பயன்படுத்தி கருத்து வெளியிட்டமை தொடர்பில் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினரான திஸ்ஸ குட்டியாராச்சியை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன கடுமையாக எச்சரித்துள்ளார்.

சபையில் வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தின் போது, திஸ்ஸ குட்டியாராச்சியினால் பெண்கள் தொடர்பில் இரட்டை அர்த்தத்தில் வெளியிடப்பட்டதாக கூறப்படும் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை அறிவிக்கும் போதே சபாநாயகர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு கூடியதன் பின்னர் சபாநாயகர் அறிவித்தலை விடுத்து கூறுகையில், 2021 நவம்பர் 20 ஆம் திகதியன்று வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போது, திஸ்ல குட்டியாராச்சி எம்.பி, ரோஹினி குமாரியின் பெயரையும், பாராளுமன்றத்தில் இல்லாத வெளியார் ஒருவரின் பெயரையும் குறிப்பிட்டு, இந்த சபையின் அகௌரவப்படுத்தும் வகையிலும் மற்றும் பெண்களை அகௌரவப்படுத்தும் வகையிலும் வெளியிட்டுள்ள கருத்து தொடர்பில் 22 ஆம் திகதி பாராளுமன்றத்தின் மகளிர் அமைப்பினர் என்னை சந்தித்த பின்னர், ரோஹினி குமாரியினால் இந்த சபையில் முன்வைக்கப்பட்ட சிறப்புரிமை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

திஸ்ல குட்டியாராச்சியினால் இந்த சபையில் முன்வைக்கப்பட்ட கருத்து தொடர்பாகதனது கவலையை தெரிவிப்பதுடன், அவரின் அவ்வாறான பொருத்தமற்ற வசனம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களையும் வெளியாரையும் அபகீர்த்திக்கு உள்ளாக்கி கூறிய கருத்துக்களை தவிர்த்துக்கொள்ளுமாறு அவரை எச்சரிக்கின்றேன்.

அத்துடன், இவ்வாறான நிலைமையை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்வதற்காக இருதரப்பினரும் பிரதம கொரடாக்களினால் தமது தரப்பு எம்.பிக்களுக்கு வலியுறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். இதேவேளை இனியும் இவ்வாறு நடந்தால் நிலையியல் கட்டளை தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை கூறிக்கொள்கின்றேன் என்றார்.

# பெண்களை அவமரியாதை செய்த திஸ்ஸ எம்.பி.மன்னிப்பு கோர வேண்டும்

## எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்து

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

பெண்களை அவமரியாதைக்கு உட்படுத்தும் வகையிலான வசனங்களை பயன்படுத்தியமை தொடர்பில் திஸ்ல குட்டியாராச்சி மன்னிப்பு கோர வேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை சபாநாயகர் தலைமையில் கூடியதை தொடர்ந்து, திஸ்ல குட்டியாராச்சி சில தினங்களுக்கு முன்னர் சபையில் வெளியிட்ட கருத்து தொடர்பில் சபாநாயகர் அறிவித்ததை தொடர்ந்து எழுந்த சர்ச்சையின் போதே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இவ்வாறு வலியுறுத்தினர்.

அதன்போது தலதா அதுகோரல எம்.பி கூறுகையில், நாங்கள் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் அமைப்பு என்ற ரீதியில் சபாநாயகரிடம் முறையிட்டதுடன், குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர் வெளியிட்ட கருத்து தொடர்பாக அவருடாகவே ஏதேனும் அறிவித்தலொன்றை வெளியிடச் செய்யுமாறு கேட்கின்றோம். அன்று சபைக்கு தலைமை தாங்கிய உறுப்பினருக்கு அது கேட்கவில்லை என்று கூறியுள்ளார். இதனால் குறித்த பெண் பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமை மீறப்பட்டமை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

**லக்ஷ்மன் கிரியெல்ல**

இதன்போது எழுந்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகையில், இந்த சபையில் எம்.பிக்களின் செயற்பாடுகள் தொடர்பான பொறுப்புகளை ஆளும் மற்றும் எதிர்க்கட்சி கொரடாக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால் சபை நடவடிக்கையின் போது சபைக்கு தலைமை தாங்குபவரும் பொறுப்பாகும். பாராளுமன்றத்தின் சபையில் தலைமை தாங்குபவர் இருப்பார்.

பிரித்தானியா பாராளுமன்றத்தில் சபாநாயகர் மற்றும் அதிகாரிகளுக்கும் மேசைகள் போடப்பட்டிருக்காது. அவர்கள் உரையை கேட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்பதற்காகவே இதனை செய்துள்ளனர் என்றார்.

**சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே**

இதேவேளைபாராளுமன்றபெண்கள் அமைப்பின் தலைவியான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே கூறுகையில், பாராளுமன்றத்தின் கௌரவம் 225 பேரின் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது. இங்கு நடப்பதை சிறுவர்கள், பெண்கள் என பார்த்துக்கொண்டிருக்கின்றனர். இவ்வாறான சபையில் ஏதேனும் வகையில் பெண்களை அகௌரவப்படுத்தும் வகையில் கருத்துக்கள் வெளியிடப்படுமாக இருந்தால் அது தொடர்பில் நாங்கள் கண்டிப்பதுடன், அது தொடர்பில் எதிராக நடவடிக்கை எடுப்போம் என்றார்.

**ரோஹினி குமாரி**

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி கூறுகையில்,

இவர் அந்த வாக்கியத்தை மீண்டும் மீண்டும் கூறுமாறு கேட்கும் போது, மீண்டும் பெண்களின் கௌரவத்திற்கே பாதிப்பு ஏற்படும். சபை முதல்வர் சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டும். இந்த நாட்டில் ஜனாதிபதியின் பாரியாரின் முன்னால் குறித்த உரையின் வசனத்தை கேட்க முடியுமா? என்று கூறுங்கள் என்றார்.

# யாழில் பிரபல வர்த்தகர் கொரோனாவால் மரணம்

மானிப்பாயைச் சேர்ந்த சுந்தர்சன் இலத்திரனியல் நிறுவனத்தின் ஸ்தாபகரும், பிரபல வர்த்தகருமான சு.சிவகுமாரன் கொரோனாத் தொற்றுக் காரணமாக ஞாயிற்றுக்கிழமை யாழில் காலமானார்.

இவர் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத் தர்மகர்த்தா சபையின் பொருளாளராகப் பெரும் பணிகள் பலவும் செய்ததுடன் சுந்தர்சன் இலத்திரனியல் நிறுவனத்தின் மூலமாகப் பலருக்கும் வேலை வாய்ப்புக் கொடுத்தவராவார்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக கடந்த சில தினங்களாக இவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வந்த நிலையில் நேற்று முற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

## நாட்டுக்குத்...

முன்பக்கத் தொடர்ச்சி...

இந்த அரசுக்கு இனவாதத்தை தவிர வேறு எதுவும் தெரியாது. அரசின் துருப்புச்சீட்டு இனவாதம் மட்டுமே .அதுமட்டுமன்றி "ஒரே நாடு ஒரே சட்டம்" என்ற ஜனாதிபதி செயலணி மூலம் நாட்டுக்கு தீ வைக்க அரசு முடிவெடுத்துள்ளதென எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல சாடினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை,இடம்பெற்ற ஜனாதிபதி, பிரதமருக்கான செலவினத் தலைப்புக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு சாடிய அவர் மேலும் கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை ஏன் எமக்கு இன்னமும் வழங்கவில்லை?.சமல் ராஜபக்ஷ உபகுழு அறிக்கையை எமக்கு வழங்க முடியுமா முடியாதா? பிரதமர் சபையில் உள்ளார், அவரிடமே இவற்றை கேட்கின்றோம். ஏற்கனவே முன்வைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மாற்றப்பட்டு புதிய பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது. ஒவ்வொருவரை இலக்கு வைத்து அவர்களை தெரிவுசெய்து வழக்கு தொடுக்கப்படுகின்றது.

உயிர்த்த ஞாயிறு தொடர்பில் முதலில் தகவல் தெரிந்தவர் மீது வழக்கு தொடுக்கப்படாது அப்போதைய ஜனாதிபதியை குற்றவாளியாக்குவதன் மூலமாக இந்த வழக்கு தோற்கடிக்கப்படும். அதுமட்டுமல்ல ஒரு சிலரது தகவல்களை அரசு அழித்துவிட்டது. ஆகவே நீதிமன்றத்தை மிதித்துக்கொண்டு நியாயத்தை பெற்றுக்கொடுக்க முடியாது.

இதேவேளை சகல அமைச்சுகளுக்கும் செயலணிகள் உருவாக்கப்பட்டு அமைச்சரவையை பலவீனப்படுத்தியுள்ளனர். ஜனாதிபதி சகல அதிகாரங்களையும் செயலணிகளை வைத்துக் கொண்டு இயக்கி வருகின்றார்.அதேபோல் "ஒரே நாடு ஒரே சட்டம்" என்ற ஜனாதிபதி செயலணியை உருவாக்கி நாட்டுக்கு தீ வைக்க முடிவெடுத்துள்ளனர். இனவாதத்தை உருவாக்கி நாட்டை தீ வைக்கவே நினைக்கின்றனர். இந்த அரசுக்கு இனவாதத்தை தவிர வேறு எதுவும் தெரியாது. அவர்களின் துருப் புச்சீட்டு இனவாதம் மட்டுமே.அதனைத்தான் அவர்கள் முன்னெடுக்கின்றனர் என்றார்.

## புதிய...

முன்பக்கத் தொடர்ச்சி...

நிறுவனங்களின் செலவின தலைப்புகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகளாவிய கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் நாம் அரசாங்கம் என்ற ரீதியில் மக்களை பாதுகாப்பதற்கே முன்னுரிமை வழங்கினோம். மக்களின் பாதுகாப்பிற்காக நாம் உரிய நேரத்தில் சகல தீர்மானங்களையும் மேற்கொண்டோம்.

கொவிட் தொற்றின் ஆரம்பத்தில் எமது அரசாங்கம் அத்தியவசிய சேவைகளுக்காக ஜனாதிபதி செயலணியொன்றை நிறுவியது. அந்த ஜனாதிபதி செயலணியின் ஊடாக பிரதமர் அலுவலகத்திலிருந்து எமது கண்காணிப்பின் கீழ் மக்களின் அத்தியவசிய சேவைகளை நிறைவேற்றுவதற்கும், மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் ஒரு நாளின் 24 மணிநேரமும் பிரதமர் அலுவலகம் செயற்பட்டது என்பதை நாம் உங்களுக்கு நினைவுபடுத்த வேண்டும்.

அத்துடன் நாம் கட்சி தலைவர்களுடன் கலந்தாலோசித்தோம். மக்களுக்கு அத்தியவசிய சேவைகள் மற்றும் சுகாதார வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கு நாம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் முன்நின்றோம். வைத்தியர்கள், பாதுகாப்பு படையினர் ஆகியோர் அதற்காக தமது கடமைகளை நிறைவேற்றினர்.

கொவிட் தொற்றினால் ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை நாட்டை கடுமையாக பாதித்துள்ளது என்பதை நாம் அறிவோம். பெரும்பாலான தொழில்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. கொவிட் தொற்றிலிருந்து வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப அரசாங்கம் இப்போது திட்டமிட்டுள்ளது. அதன்படி குறுகிய கால மற்றும் நீண்ட கால திட்டங்களை உள்ளடக்கிய வரவு செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் இம்முறை சமர்பித்தார்.

மக்களின் சார்பிலான பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி நாட்டிற்கு தேவை. இந்த கடினமான சூழ்நிலையில் அம்மக்கள் மீண்டெழுக்கூடியதொரு பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

2019 ஆம் ஆண்டில் நாம் வீழ்ச்சியடைந்த பொருளாதாரமொன்றையே பொறுப்பேற்றோம் என்பதையும் நினைவுகூர வேண்டும். இந்த ஆண்டுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவுகள் பொருளாதாரத்தை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வழமை போல் சொந்த அரசியலுக்காக விவாதம் செய்வதை பார்த்தோம். இருப்பினும் எதிர்கட்சிகளின் நேர்மறையான கருத்துகளுக்கு நாம் செவிமடுக்கிறோம். நீங்கள் சாதகமான கருத்துக்களை கூறினால் அவற்றிற்கு செவிமடுக்க நாம் தயாராக இருக்கிறோம். இத்தருணத்தில் நாட்டின் எதிர்காலத்திற்காக நாம் கூட்டாக தீர்மானங்களை எடுக்க வேண்டும். மக்களுக்காக அந்த கடமையை நிறைவேற்றுவதற்கு இந்த உயரிய பாராளுமன்றத்தின் சகல உறுப்பினர்களுக்கும் திறன் உள்ளது.

எதிர்கட்சிகளின் முன்மொழிவுகள் மற்றும் விமர்சனங்களுக்கு நாங்கள் உன்னிப்பாகச் செவிமடுத்தோம். சில விமர்சனங்கள் நியாயமற்றவை. சில விமர்சனங்களில் ஏதேனும் நியாயம் இருப்பின், அவற்றை நாம் ஏற்று திருத்திக் கொள்ள எந்நேரத்திலும் தயாராக உள்ளோம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

அரசியலமைப்பு பற்றிப் பேசினீர்கள். நாம் இப்போது வரைவைத் தயாரித்து வருகிறோம். அதனை பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் சமர்ப்பித்து விவாதிப்போம் என்பதை நினைவூட்டுகிறேன். எனவே, இந்த விவகாரத்தில் இரகசியமாக எதையும் செய்ய மாட்டோம் என்பதையும் கூறிக்கொள்கின்றேன் என்றார்.

## எதிரணி...

முன்பக்கத் தொடர்ச்சி...

எதிர்க்கட்சி பக்கத்தில் முன்வரிசை ஆசனங்களில் அமர்ந்துகொண்டு அத்துரலிய ரத்தன தேரர், அலி சப்ரி ரஹீம் ஆகிய எம்.பிகள் தொடர்ந்து அரசுக்கு ஆதரவு வழங்குவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடும் எதிர்ப்பை வெளியிட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல, மற்றும் நளின் பண்டார எம்.பி. ஆகியோரே சபாநாயகரிடம் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். எதிர்க்கட்சியின் முன்வரிசையில் பாராளுமன்ற உறுப்பினர்களான அத்துரலிய ரத்தன தேரர், அலி சப்ரி ரஹீம் ஆகியோர் அமர்ந்துள்ளனர்.எதிர்க்கட்சியின் வரிசையில் இருந்து ஒவ்வொரு தடவையும் இவர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவாகவே செயற்படுகிறார்கள். இவர்கள் எதிர்க்கட்சியில் இருந்து உளவாளிகள் போலவே செயற்படுகிறார்கள். அத்துரலிய ரத்தன தேரருக்கு முன்வரிசை வழங்கப்பட்டால் பரவாயில்லை. அலி சப்ரி ரஹீமுக்கு முன்வரிசை வழங்க வேண்டாம். பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்களை சபாநாயகரால் நிலையியற்கட்டளையின் பிரகாரம் மாற்றியமைக்க முடியும் என்றார்.எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்லவும் இதுதொடர்பில் தந்து எதிர்ப்பை வெளியிட்டார்.

எனினும் இவர்களுக்கான முன்வரிசை ஆசனம் என்பது கட்சிரீதியாக எடுக்கப்பட்ட தீர்மானம் என்பதனால் இதில் தன்னால் தலையீடுகளை மேற்கொள்ள முடியாது என சபாநாயகர் தெரிவித்தார்.

## அமெரிக்க...

முன்பக்கத் தொடர்ச்சி...

பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் தான் பதவி விலகவுள்ளதாக நேற்று செவ்வாய்கிழமை பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அமெரிக்க தூதுவராக பதவியேற்கவுள்ளதாலேயே தான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகவுள்ளதாக அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் பாராளுமன்றத்தில் கூறுகையில்,

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, அமெரிக்கத் தூதுவராக பதவியேற்குமாறு என்னிடம் கோரிக்கை விடுத்திருந்தார். அந்தக் கோரிக்கையை நான் ஏற்றுக்கொண்டுள்ளேன். இதன்படி எதிர்வரும் இரண்டு, மூன்று நாட்களில் நான் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகவுள்ளதுடன், 29 ஆம் திகதி அமெரிக்கா நோக்கி பயணமாகவுள்ளேன்.

அமெரிக்கா ஐநா மனித உரிமைகள் பேரவையின் உறுப்புரிமையை மீண்டும் பெற்றுக்கொள்ளவுள்ளது. மனித உரிமைகள் பேரவைக்கு 10 வருடங்களாக நான் சென்றுள்ளேன். இந்நிலையில் அமெரிக்கா அதன் உறுப்புரிமையை பெறும் போது அந்த நாடே அதன் தலைமையையும் பெற்றுக்கொள்ளும். இதன்படி எமது நட்புறவை மேம்படுத்த வேண்டியது அவசியமாகும். இதனை நிறைவேற்றவே நான் அங்கு செல்கின்றேன்.

இதேவேளை எனக்கு வாக்களித்து பாராளுமன்றத்திற்கு அனுப்பிய மக்களுக்கு நன்றியை கூறிக்கொள்கின்றேன். 27 வருடங்களாக இந்த பாராளுமன்றத்தில் சேவையாற்றியே நான் இப்போது அமெரிக்கா செல்கின்றேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## என்னை...

முன்பக்கத் தொடர்ச்சி...

என்னை கொலை செய்ய முயற்சித்த விவகாரத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால்தான் ரணில் விக்கிரமசிங்க தப்பினார் .ரணில் விக்கிரமசிங்க மீது என்னால் முறைப்பாடு செய்திருக்க முடியும். எனினும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அந்த விடயத்தை விட்டு விடுங்கள் என என்னிடம் கேட்டுக்கொண்டதாலேயே ரணில் மீது முறைப்பாடு செய்யவில்லை என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இடம்பெற்ற ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கான செலவின தலைப்புக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் நான் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பிக்கள் பலர் பழிவாங்கப்பட்டோம். முதல் 10 திருடர்கள் என அப்போதைய ஆளும்தரப்பினர் தொடர்பில் நான் முறைப்பாடு செய்து 2 வருடங்களாகின்றன. எனினும் இதுவரையில் ஒருவரிடமிருந்து கூட வாக்குமூலம் பெறப்படவில்லை.

இதேவேளை, எதிர்க்கட்சியின் முன்வரிசையில் உள்ள உறுப்பினர் ஒருவர் தொடர்பில் என்னிடம் இருக்கும் ஆதாரங்களை வைத்து வாக்குமூலம் வழங்கினால் பிணை கூட வழங்காது அவரை கைது செய்து சிறையில் அடைப்பார்கள். அந்த முன்வரிசை உறுப்பினர் மட்டுமல்ல அவரது முழுக் குடும்பமும் கைது செய்யப்படும்.

இதேபோல முன்னாள் எம்.பி ரஞ்சன் ராமநாயக்கவுடன் இணைந்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்னை கொலை செய்ய முயன்றார் என முறைப்பாடு செய்தால் ரணிலும் கைது செய்யப்படுவார். இந்த விடயத்தை விட்டுவிடுங்கள் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கேட்டுக்கொண்டதாலேயே நான் இந்த விடயத்தை விட்டுவிட்டேன் .அதனால் ரணில் தப்பித்தார்.

அப்போது பொலிஸுக்கு பொறுப்பான அமைச்சராக இருந்த சாகல ரத்னாயக்க பாதாள உலகத்திற்கு உதவினார்.ஆனால் பாதாள உலகத்தை ஒழித்தது கோத்தபாய ராஜபக்ஷ தான்.இன்று பாதாள உலகத்தினரை காண முடிகிறதா?

நீதிமன்றங்களை எவ்வாறு நடத்தினீர்கள் என்று எமக்குத் தெரியும் .அலரி மாளிகையில் தான் முடிவுகள் எடுக்கப்பட்டன. பிணைமுறி மோசடியை வெளியில் கொண்டு வந்ததாலே எனக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார்கள்.

எமது ஆட்சியில் நாம் யாரையும் பழிவாங்கவில்லை. ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதை தடுக்கவோ குழப்பவோ இல்லை. பழி வாங்குவதை நிறுத்துமாறு ஜனாதிபதியும் பிரதமரும் எமக்கு கூறியுள்ளனர்.ஜனாதிபதியை விரும்பியவாறு விமர்சிக்க முடிகிறது. நாட்டுக்காக சிறந்த கொள்கைகளை கொண்டுவந்தவரை விமர்சிக்கின்றனர்.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவாகி முதலாம் வருடத்தில் 1.3 பில்லியன் ரூபா தான் செலவிட்டார். மைத்திரிபால சிறிசேன 3.07 பில்லியன் ரூபா செலவிட்டார். கோத்தபாய ராஜபக்ஷ 1.7 பில்லியன் ரூபாவை மக்களுக்காக எஞ்சவைத்தார். 200 வாகனங்களை முன்னாள் ஜனாதிபதி பயன்படுத்தினார்.ஆனால் எமது ஜனாதிபதி 10 வாகனங்களை மாத்திரம் தான் பாவிக்கிறார். தனியார் வாகனங்களுக்கான எரிபொருள் செலவை அவரே செய்கிறார்.

1520 வாகனங்களை கடந்த அரசில் அமைச்சர்கள் பயன்படுத்தினார்கள். ஆனால் எமது அமைச்சர்களுக்கு 3 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த 2 வருடத்தில் புதிய வாகனம் தருவிக்க அனுமதி வழங்கப்படவில்லை. ஆனால் உங்கள் ஆட்சியில் புதிய வாகனங்கள் வாங்கப்பட்டன. ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தில் பெரும்பகுதி கோவிட் பிரச்சினையிலே சென்றது. நாட்டை கட்டியெழுப்புவதை ஒருபக்கம் வைத்து மக்களை வாழவைக்க ஜனாதிபதி பணியாற்றுகின்றார் என்றார்.

# கிண்ணியா அனர்த்தத்தின் பின்னரான மீட்புப் பணிகளின் போது...







படங்கள் - கந்தளாய், மூதூர், தோப்பூர், முள்ளிப்பொத்தானை தம்பலகாமம், சீனக்குடா, காரைதீவு நிருபர்கள்

## வவுனியாவில் 8 யானைகள் உயிரிழப்பு

வவுனியா நிருபர்

வவுனியா மாவட்டத்தில் எட்டு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன. வவுனியா மாவட்டத்தில் இவ் வருடம் நவம்பர் 22 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் செட்டிகுளத்தில் 3, நெடுங்கேணியில் 3 , வவுனியாவில் 2 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

காட்டு யானைகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் நுழைகின்றதுடன், மக்களின் வாழ்வாதாரங்களையும் அழித்தொழிக்கும் நடவடிக்கையையும் மேற்கொள்கின்றன. இதனால் மக்கள் காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுடன் வசித்து வருகின்றனர். கடந்த வருடம் வவுனியா மாவட்டத்தில் 10 யானைகள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## நகர சபை உறுப்பினருக்கு கொவிட் தொற்று

நெளுக்குளம் நிருபர்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா நகரசபை உறுப்பினருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். வவுனியா நகரசபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ச.தனுஸ்காந்தின் மனைவிக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் அவருக்கு மேற்கொண்ட துரித அன்டிஜன் பரிசோதனையில் அவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அவர் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையின் கொவிட் விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அவரது குடும்பத்தினருக்கு திங்கட்கிழமை மேற்கொண்ட துரித அன்டிஜன் பரிசோதனையில் நகரசபை உறுப்பினருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர் சிகிச்சைக்காக தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவருடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்த சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## முந்திச் செல்வதில் சற்று தாமதம்
## இ.போ.ச.சாரதி, நடத்துனர் மீது தாக்குதல்
### முச்சக்கரவண்டியில் சென்ற மூவர் கைது

அநுராதபுரம் நிருபர்

இலங்கை போக்குவரத்து சபையின் அநுராதபுரம் டிப்போவுக்கு சொந்தமான பஸ்ஸொன்றின் சாரதியையும் நடத்துனரையும் தாக்கி பஸ்ஸுக்கு சேதம் ஏற்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவரை ராஜாங்கனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் 22 ஆம் திகதி தமுத்தேகம- ராஜாங்கனை வீதியில் இடம்பெற்றுள்ளது. காயமடைந்த சாரதி மற்றும் நடத்துனர் சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் குறிப்பிட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் 25,29,34 வயதுகளையுடைய ராஜாங்கனை அங்கமுவ பகுதிகளை வசிப்பிடமாக க் கொண்டவர்கள் பஸ்ஸுக்குப் பின்னால் சென்ற முச்சக்கரவண்டி,முந்திச் செல்வதற்கு இடம் கொடுப்பதற்கு சற்று தாமதம் ஏற்பட்டதற்காக பயணிகளை ஏற்றிச் சென்ற இ.போ.ச.பஸ்ஸி ன் சாரதியையும் நடத்துனரையும் இவர்கள் தாக்கியுள்ளார்கள் என்பது விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## கர்ப்பிணித் தாய்மாருக்கு பூஸ்டர் தடுப்பூசி

கொரோனா தடுப்பூசியின் இரண்டாவது டோஸை செலுத்தி 6 மாதங்களைக் கடந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக்கொள்ள முடியும் என விஷேட வைத்தியர் சனத் லெனரோல் தெரிவித்துள்ளார். 6 மாதங்களின் பின்னர் தடுப்பூசியின் வீரியம் குறைவதனால் கர்ப்பிணிப் பெண் ஒருவர் தொற்றுக்குள்ளானால் அது குழந்தைக்கும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

அதனால் கர்ப்பிணிப் பெண்கள் பூஸ்டர் தடுப்பூசியை உரிய காலத்தில் செலுத்திக் கொள்வது சிறந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச உதைபந்தாட்ட சங்கத்தின்(பீபா) தலைவரை இலங்கை உதைபந்தாட்ட சங்கத்தின் உப தலைவரும் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான அப்துல் மனாப் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடுவதைக் காணலாம்.

படம்:சம்மாந்துறை நிருபர்



## புலிகளின்...

**முன்பக்கத் தொடர்ச்சி..**

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு போதைப்பொருள் வர்த்தகர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான செலவினத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. யான ஶ்ரீதரனின் உரை தொடர்பில் குறுக்கிடு செய்த போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்தார்.

ஶ்ரீதரன் எம்.பி. தனது உரையில் , ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் தலைவர் ஞானசாரதேரர்,போதைப்பொருள் பாவனை தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் ஏன் பேசவில்லை எனக்கேட்கின்றார்.2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கில் போதைப்பொருள் பாவனை இருந்ததா?கஞ்சா இருந்ததா?அல்லது யாரவது இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டார்களா? போதைவஸ்தால் யாரும் பாதிக்கப்பட்டார்களா அல்லது யாரவது அதனை உட்கொண்டார்களா? 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்த அரசின் ஆட்சி வந்த பின்னரே திட்டமிட்டு வடக்கில் போதைப்பொருள், கஞ்சாக்கள் பாவனைக்கு விடப்பட்டன படைகள் குவிக்கப்பட்டுள்ள வடக்கில் தற்போது எப்படி போதைவஸ்துக்கள் தாராளமாக புழங்குகின்றன.? நாங்கள் எத்தைதடவை இந்த போதைவஸ்துக்கள் தொடர்பில் இந்த சபையில் பேசியிருப்போம். நாம் போதைவஸ்துக்களுக்கு எதிரானவர்கள். எனக்கூறிக்கொண்டிருந்த போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறுக்கிடு செய்தார்.

எனினும் அவருக்கு மைக் வழங்கப்படாத நிலையில் சபை முதல்வரான தினேஷ் குணவர்தன எழுந்து சபைக்கு தலைமை தாங்கியவருக்கு கட்டிக்காட்டியதையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு நேரம் கொடுக்கப்பட்டது.

இதன்போதே விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு போதைப்பொருள் வியாபாரி.அவர் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டார். இது ஶ்ரீதரனுக்கு தெரியுமோ அல்லது மறைக்கிறாரோ தெரியாது.

அத்துடன் ஶ்ரீதரன் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த போது வடக்கின் வசந்தம் கிழக்கின் உதயம் என சில விடயங்களை செய்ததாக ஏற்றுக்கொள்கின்றார். அதற்கு முன்னர் ஏன் செய்யப்படவில்லை ?. அதற்கு முன்னர் செய்ய நீங்கள் விடவில்லை தடைகளை ஏற்படுத்னீர்கள் என்றார்.

இதற்கு ஶ்ரீதரன் எம்.பி. பதிலளிக்கையில், நான் அரசுக்கு வக்காலத்து வாங்கும் கையாள் அல்ல. அரசினது கால்களைக் கழுவும் வேலையும் செய்பவனல்ல.அல்லது உயிருக்கு பயந்து கவச வாகனங்களில் பயணிப்பவனுமல்ல .தமிழர்கள் எதற்கும் துணிந்தவர்கள் என்று கூறிக்கொண்டிருந்த போது அவரின் நேரம் முடிவடைந்துவிட்டதாககூறி வேறு ஒருவருக்கு நேரம் ஒதுக்கப்பட்டது.

ஶ்ரீதரன் எம்.பி. டக்ளஸ் தர்க்கத்தின் போது பிரதமர் மஹிந்த ராஜபக்ச ,நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச ஆகியோரும் சபையில் இருந்தனர். அரச தரப்பின் கடுமையான கூச்சல்களுக்கு மத்தியிலேயே ஶ்ரீதர் எம்.பி உரையாற்ற வேண்டியேற்பட்டது.

## இரு நாள்...

**முன்பக்கத் தொடர்ச்சி..**

நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர் ஒன்றியம் மற்றும் அரசாங்க மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் ஆகியன தெரிவித்துள்ளன.

சுகாதார சேவையில் சம்பள முரண்பாடு காணப்படுவதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அது சுகாதார அமைச்சின் செயலாளருக்குத் தெரியாது. அவருக்கு உண்மையில் எப்படி பேச்சுவார்த்தை நடத்துவது மற்றும் தீர்மானமெடுப்பது, ஒரு பிரச்சினையை எவ்வாறு தீர்ப்பது என்பது தெரியாதென ஒன்றியத்தின் தலைவர் ரவி குமுதேஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சுகாதார தொழில்நுட்ப வல்லுநர்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படாததன் காரணமாக மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

17.11.2021 அன்று மருத்துவ ஆய்வுகூட நிபுணர்கள், துணை மருத்துவர்கள் மற்றும் துணை மருத்துவர்கள் உள்ளிட்ட மருத்துவ வல்லுநர்கள் நடத்திய அடையாள வேலை நிறுத்தம் தொடர்பில் சுகாதார அமைச்சோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ பேச்சுவார்த்தைக்கு அழைக்கவில்லை.

இதனால் ஏழு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து இம்மாதம் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் மீண்டும் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் வேலைநிறுத்தப் போராட்டத்தினால் பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

## யுத்த பூமியை...

**முன்பக்கத் தொடர்ச்சி..**

ஏற்படப்போவதில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் உங்கள் இனவாதத்தை முதலில் தூக்கி வெளியே போடுங்கள். எமது மக்கள் இழந்த தமது உறவுகளை நினைவு கூர அனுமதி கொடுங்கள் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி.யான எஸ்.ஶ்ரீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான செலவினத்தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், தமிழர்களின் பிரதேசங்களில் யுத்த காலத்தில் தமது உயிர்களை தியாகம் செய்த அதமது குழந்தைகள், மாவீரர்களை அந்த மக்கள் நினைவு கொண்டு விடுவார்கள் என்பதற்காக பொலிஸாரும் இராணுவத்தினரும் ஒவ்வொரு மாவீரர் துயிலும் இல்லங்கள் முன்பாகவும் குவிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு செய்வதன் மூலம் தமிழர்களின் மனங்களில் கலாசார ரீதியாக,பண்பாட்டு ரீதியாக அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கின்ற தமது வீரப்புதல்வர்களை மறக்கக்கூடியதொரு சூழல் வருமா? அல்லது சிங்கள மக்கள் இதனை விரும்புகின்றார்களா?

2016,201%,2018,2019 களில் கூட, இப்போதைய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச 2019 இல் ஜனாதிபதி பதவியேற்ற பின்னரும் கூட எமது மக்கள் மிகவும் அமைதியாக மாவீரர் தினத்தை அனுஷ்டித்தார்கள். எந்தவிதமான இடைஞ்சலும் இந்த நாட்டில் ஏற்படவில்லை. இங்கே பல அமைச்சர்கள் விழாக்களை நடத்துகின்றார்கள். விளையாட்டுப்போட்டிகள் நடக்கின்றன. இதற்கெல்லாம் எந்தக் கொரோனாவும் இல்லை. ஆனால் மாவீரர் துயிலும் இல்லங்களுக்குள் மட்டும் தான் கொரோனா வருமென அந்த இடங்களில் இராணுவம் ,பொலிஸாரை குவித்து ஒரு அச்சுறுத்தலை ,யுத்த பிரதேசங்கள் போன்று இன்று வடக்கும் கிழக்கும் காணப்படுகின்றன.

தயவு செய்து இந்த நிலைகளை மாற்றுங்கள், முதலில் புரிந்துணர்வு வேண்டும். நாட்டில் ஒரு இணக்கப்பாடு வேண்டும் எந்தநாள் மக்கள் மனங்களை வெல்ல வேண்டும். தமிழ் மக்களாகிய நாம் பாதிக்கப்பட்டுள்ளோம். நாம் எமது பிள்ளைகளை இழந்துள்ளோம். ஆகவே நாம் எமது பிள்ளைகளை நினைக்கின்ற வணக்கமுறைகளை நீங்கள் தடுப்பதன் மூலம் நீங்கள் எதனை அடையப்போகின்றீர்கள். அன்புக்குரிய சிங்கள மக்கள் கூட இதனை எதிர்க்கவில்லையே?2016,201%,2018,2019 ஆண்டுகளில் எங்கேயாவது ஒரு சிங்கள பிரதேசத்திலே மாவீரர் தினத்துக்கு எதிராக எதிராக சிங்கள மக்கள் யாரும் ஊர்வலம் கூட நடத்த வில்லையே? ஆனால் இந்த நாட்டிலே அரசியல் தேவைக்காக ஜனாதிபதியிலிருந்து அமைச்சர்கள் வரை தங்களது அரசியல் தேவைக்கவே இதனை செய்கின்றார்கள் என்ற விடயம் இப்போது தெளிவாகத் தெரிகின்றது. ஆகவே இதிலிருந்து மாறுங்கள்.

மாவீரர்கள் புதைக்கப்பட்டிருக்கும் துயிலுமில்லங்களில் எல்லாம் இராணுவத்தினர் முகாம் அமைத்து சப்பாத்துக் கால்களுடன் பந்து விளையாடுகின்றார்கள். உங்களுடைய ஒரு குழந்தை அல்லது உங்களுடைய ஒரு சிங்கள வீரன் புதைக்கப்பட்ட இடத்தில் தமிழ் இராணுவத்தை சேர்ந்தவர்கள் இவ்வாறு நடந்தால் உங்கள் மனம் என்ன பாடுபடும் என்பதனை நீங்கள் இந்த நாட்டின் தலைவராக,தந்தையாக ,இந்த நாட்டிடை சீரமைக்க நினைக்கின்ற ஒரு மனிதனாக நினைத்துப் பாருங்கள். இதே நிலையில் தான் இந்த நாட்டில் உள்ள ஏனைய இனங்களின் மன நிலையும் என்பதனை புரிந்து கொண்டால் இந்த நாட்டில் நல்லிணக்கம் என்பது மிக இலகுவாக ஏற்படுத்தக்கூடியது. அமைதி, பொருளாதாரம் என்பனவற்றை இலகுவாக கட்டி வளர்க்கலாம்.

நீதிமன்றம் கட்டளை பிறப்பிக்காமலே பொலிஸார் தடைக்கட்டளைகளை கொண்டு வந்து தருகின்றனர். பருத்தித்துறை. சாவகச்சேரி, மல்லாகம் நீதிமன்றங்கள் பொலிஸாரின் விண்ணப்பங்களை நிராகரித்துள்ளன . ஆகவே நீதிமான் கட்டளை இல்லாமலேயே ,நீதிமன்றங்கள் அறிவிக்காமலேயே பொலிஸார் கட்டளைகளை வழங்குகின்றார்கள். கையெழுத்து வாங்குகிறார்கள். இந்த நாடு மிக மோசமாகவுள்ளது. நாட்டின் நடவடிக்கைகள் பாதகமான சூழலில் போய்க்கொண்டிருக்கின்றது. தயவு செய்து சிந்தியுங்கள். இந்த நாட்டிடை அமைதிப்பூங்காவாக்க வேண்டும் என்றால் மாவீரர்களை நினைவு கூருவதற்கு தடையில்லை என்பதனை அறிவியுங்கள்.

நாட்டில் 19 ஆணைக்குழுக்கள் உள்ளன. இந்த ஆணைக்குழுக்களுக்கு எந்தளவு நிதி ஒதுக்கப்படுகின்றது? இந்த ஆணைக்குழுக்கல்ல நாட்டிற்கு என்ன பயன்? நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச இங்கு பேசும்போது நாங்கள் வடக்கிற்கு மின்சாரம் அனுப்பினோம் ரயில் அனுப்பினோம் என்று கூறினார். நாம் ஏறுக்கொள்கின்றோம். அதேவேளை 30 வருடங்களாக நாம் இவையெல்லாம் இல்லாமல் இருந்தோம் என்பதனை நீங்கள் ஏறுக்கொள்கின்றேர்களா? நாம் பொருளாதார தடைக்குள் வாழ்ந்தோம். யார் இந்த தடையை விதித்தது? பொருட்கள் இல்லாவிட்டாலும் எமது மக்கள் நிம்மதியாக இருந்தார்கள். ஆனால் இப்போது எல்லாமிருந்தாலும் எமது மக்களிடம் நிம்மதி இல்லை. சுற்றிவர இராணுவம் நிற்கின்றது. பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளன. நீங்கள் உண்மையில் அமைதியை நல்லிணக்கத்தை விரும்பினால் ஏன் விதண்டாவாதமாக இதனை திணிக்கின்றீர்கள்.

சிங்களமக்களின் அரசியல் வேறு. சிங்கள தலைவர்களின் அரசியல் வேறு. அதுதான் இங்குள்ள பிரச்சினை. இனவாதத்தை தூண்டி அதனூடாகத்தான் நீங்கள் கோலோச்ச வேண்டுமென்றால் அது ஒருபோதும் நடைபெறப் போவதில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் உங்கள் இனவாதத்தை முதலில் தூக்கி வெளியே போடுங்கள். எமது மக்கள் இழந்த தமது உறவுகளில் நினைவு கூர அனுமதி கொடுங்கள். இறந்து போன அந்த ஆத்மாக்கள் மேலே நீங்கள் சப்பாத்துக் கால்களால் மிதிக்கும்வரை இந்த நாட்டில் அமைதி, சமாதானம்,நல்லிணக்கம் ஏற்படப் போவதில்லை என்றார்.

## முறையான...

**முன்பக்கத் தொடர்ச்சி..**

என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளையும், நிவாரணங்களையும் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நிலையியல் கட்டளை 27/2 இன் கீழ் கேள்வி யெழுப்பி உரையாற்றும் போது, கிண்ணியாவில் விபத்து தொடர்பிலும் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அதன்போது சஜித் பிரேமதாச மேலும் கூறுகையில், கிண்ணியா குறுஞ்சாங்கேணி இடையே படகுப்பாதை கவிழ்ந்தமையினால் 6 பேர் உயிரிழந்துள்ளதுடன் 11 பேர் மருத்துவமனையில் அனுமதிக்ககப்பட்டுள்ளனர். இதேவேளை மூவர் காணாமல் போயுள்ளனர். அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு ஒரு விடயத்தை நினைவுகூர வேண்டிய விடயம் உள்ளது. கடந்த ஏப்ரல் 11 ஆம் திகதி, நிமல் லன்சா அங்கு பாலத்திற்கான அடிக்கல்லை நாட்டி அந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க முயன்ற போதும், அந்த வேலைத் திட்டம் ஸ்தம்பிதமடைந்துள்ளது. இதனால் அந்த வேலைத்திட்டத்தை காலம் தாழ்த்தாது முன்னெடுக்குமாறு கேட்கின்றேன்.

இந்தப் படகில் 20 பேர் பயணித்துள்ளதாகவே அறிகின்றேன். இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு அரசாங்கத்தின் தலையீட்டில் வழங்கக் கூடிய உயர்ந்த பட்ச நிவாரணங்கள் மற்றும் இழப்பீடுகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று அந்த படகுப்பாதை நடத்தப்பட்ட முறை தொடர்பாகவும், அதன் சட்டப்பூர்வ தன்மை தொடர்பிலும் முறையான விசாரணை நடத்துமாறு யோசனை முன்வைக்கின்றேன்.

அதேபோன்று விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இந்த சபையின் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துகொள்கின்றோம் என்று கூறினார்.

## தௌபீக்...

**முன்பக்கத் தொடர்ச்சி..**

துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. பிரதேசமெங்கும் வெறிச்சோடிப் போய் சோகமயமாக காணப்படுகின்றது .

இந்தப் பாதுகாப்பற்ற இழுவைப் பாதைக்கு அனுமதி வழங்கியது யார்? உயிரிழப்புக்களுக்கு அவர்களேபதில்கூற வேண்டுமென தெரிவித்து கிண்ணியாபுஹாரியடி சந்தி மற்றும் கிண்ணியா பிரதேச செயலகம் என்பவற்றுக்கு முன்னால் வீதியை மறித்து டயர்களை எரித்தும் பொதுமக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

புஹாரி சந்தியில் அமைதியின்மையும் ஏற்பட்டுள்ளது.அமைதியை பேணும் வகையில் பெருமளவு இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

தமக்கான போக்குவரத்து வசதிகள் இல்லாமை, தம்மை அரசியல் தலைமைகள் கண்டுகொள்ளாமை ஆகிய காரணங்களினால் இன்று பல உயிர்கள் காவுக்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த கிண்ணியா மக்கள் , மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் இல்லத்தின் மீது மதியம் கடும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் வீட்டிற்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. வீட்டின் பாதுகாப்பு கமராக்கள் உடைக்கப்பட்ட நிலையில் வீட்டு கதவு உடைக்கப்பட்டு சேதங்கள் விளைவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அவரின் வீட்டுக்கு முன்னாலும் மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். மேலும் கிண்ணியா பிரதேச செயலகம் முன்னாலும் மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டதுடன் இந்த அனர்த்தத்துக்கு அதிகாரிகளும் பொறுப்பு கூற வேண்டுமென தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்த அனர்த்தத்தை அடுத்து கிண்ணியாவில் பொதுமக்கள் இளைஞர்கள் பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டனர். இந்தச் சம்பத்தையடுத்து கிண்ணியாவில் பெரும்பாலான கடைகள் மூடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது .

## கிண்ணியாச்...

**முன்பக்கத் தொடர்ச்சி..**

படகுப்பாதையை நடத்தியவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

படகுப் பாதை விபத்துச் சம்பவம் தொடர்பாகபாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமைகருத்து வெளியிடும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்,

படகுப் பாதை கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். அது தொடர்பாக அரசாங்கம் ஆழ்ந்த கவலையை கூறிக்கொள்கின்றது.

இந்நிலையில் இந்தப் பிரச்சனையையும் அரசாங்கத்தின் மீது சுமத்துவதற்கே முயற்சிக்கின்றனர். இந்த பாலத்திற்கான அடிக்கல் நல்லாட்சி அரசாங்கத்தினாலேயே அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அதற்கான மதிப்பீடுகள் செய்யப்படாதும் மற்றும் கேள்வி மனுக் கோரல்கள் இன்றியும் அடிக்கல் நாட்டப்பட்டிருந்தது.

ஆனால் எங்களின் அரசாங்கம் வந்த பின்னர் கேள்வி மனுக்கோரலை மேற்கொண்டு இந்த பாலத்தின் பகுதியை, அந்தப் பிரதேச மக்களின் பாவனைக்காக விரைவில் அமைத்துக்கொடுக்க ஜனாதிபதியின் சௌபாக்கிய நோக்கு வேலைத்திட்டத்திற்கமைய நாங்கள் நடவடிக்கை எடுத்திருந்தோம்.

இந்த பாலத்தை அமைக்கும் போது, குறுக்குப் பாதையொன்றும் இந்த மக்களுக்காக வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பாதை 3 கிலோ மீற்றர் தூரத்தை கொண்டது. அந்த பாதையை மக்கள் பயன்படுத்த விரும்பியிருக்கவில்லை.

இந்நிலையில் படகுப் பாதையை நடத்தும் பொறுப்பு நகர சபைக்கே வழங்கப்பட்டிருந்தது. இது ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் முஸ்லிம் காங்கிரசுக்கு உரியது. அவர்களே, படகுப் பாதை சேவைக்கு அனுமதி வழங்கியுள்ளனர். இந்த சேவையை நாங்கள் வழங்கியதாக அர்த்தப்படுத்த வேண்டாம். இது உள்ளூராட்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இதில் சிறுவர்களை அழைத்துச் செல்லும் போது உயிர்காப்பு அங்கிகளை அணிந்திருக்கவில்லை என்றே பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் சட்டத்தை செயற்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளேன். அந்த படகுச் சேவையை நடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் நாட்டின் சட்டத்திற்கமைய இது மனித கொலையே. இதனை அரசியலுக்குள் கொண்டு செல்ல வேண்டாம். இதனை கண்டிக்கின்றோம்.

2015 ஆம் ஆண்டில் உங்களின் அரசாங்கத்தை அமைப்பதற்காக மக்கள் வாக்களித்தனர். ஆனால் அவர்களுக்காக பாலத்தை அமைத்துக்கொடுக்கவில்லை. ஆனால் எங்களின் அரசாங்கம் வசந்த உதயத்தின் மூலம் பாரிய சேவையை வழங்கப்பட்டுள்ளது. பாலங்கள் பலவற்றை செய்துள்ளோம். இந்த பாலம் உள்ளூராட்சியின் கீழ் வருவதால் அதற்கான கேள்வி மனுக்களை கோரினோம்.

இதற்கு அனுமதி வழங்கப்பட்டது யார் என்பன தொடர்பில் ஆராய்ந்து சட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுப்போம் என்று தெரிவித்துள்ளார்.

## பயணிகளுடன்...

**முன்பக்கத் தொடர்ச்சி..**

குறிஞ்சாக்கேணி கரையிலிருந்து கிண்ணியா நகரசபை கரையை நோக்கி பயணிகளை ஏற்றி வந்த படகே இவ்வாறு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தப் படகில் 30 பேர் வரையில் பயணித்த அதேவேளை,6 பேர் பலியானதுடன்,20 பேர் உயிருடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் மூவர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த அனர்த்தத்தில் பலியானவர்களில் 4 பேர் 6 வயதுக்கும் குறைவான பாடசாலை சிறுவர்கள் என்பது பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

கிண்ணியா குறிஞ்சாக்கேணிப் பால நிர்மாண வேலைகள் இடம்பெற்று வருவதால் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக தற்காலிகமாக அமர்த்தப்பட்டிருந்த மோட்டார் இழுவைப் படகு வழமை போல்,நேற்று காலை 7 மணியளவில் 17 மாணவர்கள் உட்பட சுமார் 30 பேரை ஏற்றிக்கொண்டு தன்னுடைய பயணத்தை ஆரம்பித்திருக்கிறது.

பாடசாலைகள் முழுமையாக மீண்டும் ஆரம்பமாகியுள்ளதனால் இந்த படகில் ஆசிரியர்களும் பாடசாலை மாணவர்களுமே பெருமளவில் பயணம் செய்துள்ளார்கள். இந்நிலையில்,படகு பயணத்தை ஆரம்பித்து சில நிமிடங்களில் படகு தடுமாற தொடங்கியதுடன், படகின் ஒரு பக்கமாக மெதுமெதுவாக நீருக்குள் மூழ்கத் தொடங்கியிருக்கிறது. அப்பொழுது அதில் பயணித்த சிறுவர்கள் ,மற்றும் பயணிகள் அச்சமடைந்து செய்வதறியாது கதறியழத் தொடங்கிய நிலையில், கண் சிமிட்டும் நேரத்துக்குள் படகின் ஒரு பகுதி சரிந்து நீருக்குள் முழுமையாக மூழ்கத் தொடங்கியதுடன்,அதில் பயணித்த சிறுவர்கள்,மற்றும் பயணிகள் அனைவரும் கதறியபடியே நொடிப்பொழுதில் நீருக்குள் மூழ்கத் தொடங்கினர்.

இந்நிலையில்,படகில் பயணித்தவர்களின் கதறல் சத்தம் கேட்டு ஆற்றின் கரையில் நின்றவர்கள் மற்றும் சுற்று வட்டாரத்தில் நின்றவர்கள் விரைந்து வந்து, நீரில் மெல்ல மெல்ல மூழ்கிக் கொண்டிருந்த சிறுவர்கள் மற்றும் பயணிகளை காப்பாற்றும் முயற்சியில் இறங்கியதுடன், உடனடியாக கடற்படையின் விரைவு நடவடிக்கைகப்பல் படை, மரைன் படை, சிறப்பு கப்பல் படை மற்றும் சுழியோடிகள் அடங்கிய 8 நிவாரணக் குழுக்கள் களத்துக்கு விரைந்து வந்து நீரில் மூழ்கி கொண்டிருந்தவர்களை மீட்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்தினர்.

இந்நிலையில் படகு விபத்து தொடர்பான செய்தி சில நிமிடங்களில் திருகோணமலையெங்கும் பரவியதால் ஆயிரக்கணக்கான மக்கள் விபத்து நடந்த பகுதியில் குவிந்ததுடன்,மூழ்கிய அனைவரும் உயிருடன் மீட்கப்பட வேண்டுமென பிரார்த்தனையில் ஈடுபட்டு கொண்டிருந்ததுடன்,சிலர் மீட்பு குழுவினருடன் இணைந்து அவர்களை காப்பாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஆனால் ஒட்டுமொத்த மக்களுடைய பிரார்த்தனையின் பயனாகவும் மீட்பு குழுவினரின் முயற்சியின் பயனாகவும் படகில் பயணித்த 20 பேரை மாத்திரமே உயிருடன் மீட்க முடிந்தது.ஏனைய ஆறு பேருடைய உடலும் உயிரற்ற உடல்களாகவே மீட்பு குழுவினரால் மீட்க முடிந்தது.

இதில் உயிரிழந்த நிலையில், மூன்றரை வயது குழந்தை, மற்றும் 6 வயதுடைய இரண்டு சிறுவர்கள்,8 வயதுடைய சிறுவன் மற்றும் 30 வயதுடைய ஆசிரியை ஒருவர்,70 வயதுடைய ஒருவர் என 6 பேர் சடலங்களாக மீட்கப்பட்ட வேளையில், அப்பிரதேசத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் கதறியழுத சத்தம் விண்ணைப் பிளந்ததுடன், அப்பிரதேசமெங்கும் சோகத்தை ஏற்படுத்தியது.

### பாதுகாப்பற்ற பயணம் ...

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதியில் பழைய பாலத்துக்குப் பதிலாக புதிய பாலம் நிர்மாணிக்கப்படுவதனால் கிண்ணியா குருஞ்சான்குளம் ஆகியவற்றுக்கு இடையில் படகு சேவை அண்மைக்காலமாக நடைபெற்றுவருகிறது.

மக்களுக்கான போக்குவரத்துக்காக இந்த ஆற்றினை கடப்பதற்கு இழுவை படகினை பயன்படுத்தி வந்துள்ளனர்.எனினும் இந்தப் படகு சேவை ஆபத்தானது என பல தடவைகள் வலியுறுத்தி வந்த போதிலும் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை என அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

தினமும் இந்த இழுவைப் படகின் ஊடாக நூற்றுக்கணக்கான மக்கள் பாதுகாப்பற்ற முறையில் பயணம் மேற்கொண்டு வந்த நிலையிலேயே நேற்று காலை இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.அத்துடன் மேற்படி விபத்துக்கு அதிக பயணிகளை ஏற்றியமையே காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

### கிளர்ந்தெழுந்த மக்கள்; போர்க்களமாக மாறிய கிண்ணியா நகரம்

இந்நிலையில், மகிழ்ச்சியாகவும் குதூகலத்துடனும் படகில் ஏறி துள்ளி விளையாடிக்கொண்டு சென்ற மழலைகளின் உடலங்களை கண்ணுற்ற, அங்கு கூடியிருந்த மக்கள் கதறியழுததுடன், இந்த சம்பவத்தை தாங்கி கொள்ள முடியாத பலர் வெகுண்டெழுந்து கிண்ணியா நகரை நோக்கி படையெடுத்தனர்.

அதே போல்,இந்த துயர செய்தி சில நிமிடங்களில் திருகோணமலையெங்கும் பரவ,திருகோணமலையின் அனைத்து பிரதேசங்களிலிருந்தும் மக்கள் கிண்ணியாவுக்கு படையெடுத்தனர்.கிண்ணியாவுக்குள் நுழைந்த பெரும் திரளான மக்கள் கிண்ணியா பிரதேச சபைக்கு முன்னால் ஒன்று கூடி தங்களுடைய ஆத்திரத்தை வெளிப்படுத்தியதால் சில மணி நேரம் கிண்ணியா நகரம் போர்க்களமாக காட்சியளித்தது.

கிண்ணியா பிரதேச சபைக்கு முன்னால் டயர்களை போட்டு எரித்த மக்கள், உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறு வீதியெங்கும் திரண்டு நின்றதால் கிண்ணியா பிரதேச சபையை சுற்றிய பிரதேசமெங்கும் பதற்றமான நிலைமை நிலவியது.

இதனை தொடர்ந்து அங்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் உடனடியாக வரவழைக்கப்பட்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சி மக்களுடைய ஆக்ரோஷத்துக்கு முன்னால் தோல்வியில் முடிவடைந்தது.

தொடர்ந்து மக்களின் போராட்ட பலத்தை தணிக்க முடியாத பொலிஸார் போராட்டக்காரர்களுடன் சற்று கடுமையாக நடக்க முனைந்த வேளையில், பொலிஸாருக்கும் மக்களுக்குமிடையில் சில நிமிடங்கள் முறுகல் நிலைமை ஏற்பட்டது.

### பாராளுமன்ற உறுப்பினர் தௌபீக்கின் வீட்டின் மீது தாக்குதல்

இந்தச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த மக்கள் திருகோணமலை கிண்ணியா, குறிஞ்சாக்கேணி பாலம் விவகாரத்தில் அசமந்த நிலைமை காட்டப்படுவதாக கூறி முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தௌபீகின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தினர்.

பாராளுமன்ற உறுப்பினர் தௌபீகின் வீட்டிற்கு ஆத்திரத்துடன் சென்ற மக்கள் அவருடைய வீட்டின் மீது ஆவேசத்துடன் தாக்குதல் நடத்தியதால் வீட்டின் முன்பகுதி பெரும் சதமடைந்தது.குறித்த சம்பவத்தை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் மற்றும் கடற்படையினர் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து மக்களை கலைத்ததுடன்,அப்பிரதேசத்தில் பாதுகாப்பை பலப்படுத்தினர்.

### துக்கம் அனுஷ்டிப்பு

இந்த துயரம் சம்பவம் நிகழ்ந்து சில மணி நேரங்களில் கிண்ணியாவில் பெரும்பாலான கடைகள் மூடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டதுடன், நகரமெங்கும் பெரும் அமைதி நிலவியதுடன்,கிண்ணியா நகரம் சோகத்துடன் காட்சியளிக்கிறது.

## மரக்கறிகளுக்கு பற்றாக்குறை, விலை உயர்வு விற்பனை நிலையங்கள் மூடப்படும் அபாயம்

தம்புள்ள நிருபர்

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்கு நேற்றும், நேற்று முன்தினமும் போஞ்சி, கரட், உருளைக்கிழங்கு மற்றும் லீக்ஸ் முதலான மரக்கறி வகைகள் ஓரளவு கிடைக்கப் பெற்ற போதிலும், அவற்றிற்கு மிகவும் உயர்ந்த விலைகள் குறிக்கப் பட்டதால் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கு வருகை தந்திருந்த வியாபாரிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப் பட்டது.

கரட், போஞ்சி, லீக்ஸ், மற்றும் கறி மிளகாய் என்பவற்றின் கிலோ ஒன்றுக்கான வெவ்வேறு மொத்த விலைகள் 250 ரூபா முதல் 450 ரூபா வரையில் குறிக்கப் பட்டிருந்தன.

கத்தரி, பயற்றங்காய், புடலங்காய், பணி அவரை, வெண்டிக்காய், மற்றும் பாகற்காய் என்பவற்றின் கிலோ ஒன்றுக்கான மொத்த விலைகள் 120 ரூபா முதல் 280 ரூபா வரையிலான விலை வித்தியாசங்களில் காணப்பட்டன.

மரக்கறி வகைகளுக்குப் பற்றாக் குறையும் விலை அதிகரிப்பும் நிலவி வரும் நிலையில் தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்திலுள்ள சில மரக்கறி விற்பனைப் பிரிவுகள் மூடப்பட்டுள்ளன. இதனால் நுகர்வோர் மரக்கறி தட்டுப் பாட்டினாலும், அவற்றின் நாளாந்த விலை அதிகரிப்புக் காரணமாகவும் மிகுந்த கவலையடைந்திருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மரக்கறி வகைகளின் கிலோ ஒன்றுக்கான விலை விபரங்களைக் காட்சிப் படுத்தி வந்த சில்லறை வியாபாரிகள் தற்போது 100 மற்றும் 250 கிராமிற்கான சில்லறை விலைகளைக் காட்சிப் படுத்தி வருகின்றமை சுட்டிக் காட்டத் தக்கது.

## பதுளை மாவட்டத்தில் இதுவரையில் 490 கொரோனா மரணங்கள் பதிவு

### நேற்று மட்டும் 4 பேர் உயிரிழப்பு

பதுளை நிருபர்

பதுளை மாவட்டத்தில் கொரோனா தொற்றினால் நேற்று செவ்வாய்க்கிழமை நான்கு பேர் உயிரிழந்ததுடன், மாவட்டத்தின் மொத்த மரணங்கள் 490 ஆக அதிகரித்துள்ளனவென்று, பதுளை மாவட்ட சுகாதார சேவைப் பணியகம் தெரிவித்துள்ளது.

பதுளை மாவட்டத்தின் 15 பிரதேச செயலகப் பிரிவுகளிலுமே, இம் மரணங்கள் பதிவாகியுள்ளன. பதுளை - 65 பேர், பண்டாரவளை - 55 பேர், எல்ல - 12 பேர்;, ஹல்துமுள்ளை - 23 பேர், ஹாலிஎலை - 53 பேர், அப்புத்தளை - 41 பேர், கந்தகெட்டிய - 07 பேர், லுணுகலை - 15 பேர், மகியங்கனை - 60 பேர், மீகாகியுல - 12 பேர், பசறை - 31 பேர், ரிதிமாலியத்தை - 12 பேர், சொரணாதொட்டை - 10 பேர், ஊவா பரணகமை - 33 பேர், வெலிமடை - 61 பேர் என்ற வகையில் மொத்த மரணங்கள் 490 பேராகும். ஆரம்பம் முதல் 23112021 வரையிலான காலப்பகுதியிலேயே, இம் மரணங்கள் பதிவாகியுள்ளன.

மேற்படி 15 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 23112021 மட்டும் 84 பேருக்கும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. ஆரம்பம் முதல் இதுவரையிலான காலப் பகுதியில் மொத்த தொற்றாளர்களாக 31,254 பேர் பதிவாகியிருக்கின்றனர்.

இவ்வகையில், பதுளை - 4077 பேர், பண்டாரவளை - 2941 பேர், எல்ல - 1370 பேர், ஹல்துமுள்ளை - 1510 பேர், ஹாலிஎலை - 2052 பேர், அப்புத்தளை - 1874 பேர், கந்தகெட்டிய - 1045 பேர், லுணுகலை - 1284 பேர், மகியங்கனை - 4145 பேர், மீகாகியுல - 835 பேர், பசறை - 1971 பேர், ரிதிமாலியத்தை - 2787 பேர், சொரணாதொட்டை - 604 பேர், ஊவா - பரணகமை - 1767 பேர், வெலிமடை - 2992 பேர் என்ற வகையில் 31254 பேர், கொரோனா தொற்றாளர்களாக பதிவாகியுள்ளனர்.

நேற்று பதுளை-01, பண்டாரவளை-01, ஹாலிஎலை - 01, பசறை - 01 என்ற வகையில் கொரோனா மரணங்கள் நான்கு இடம்பெற்றுள்ளன.

தொற்றாளர்கள் 31254 பேரில் 25 ஆயிரம் பேர் பூரண குணமடைந்து வீடுகளுக்கு சென்றுள்ளனர். மிகுதி 6254 பேரில் 490 பேர் மரணமடைய 5764 பேர் கோவிட் 19 சிகிச்சை நிலையங்களிலும், தத்தம் வீடுகளிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## வீட்டுப் பணிப்பெண்களுக்கும் ஈ.பி.எவ்., ஈ.ரி.எவ் கிடைக்கும்

### நடவடிக்கை என்கிறார் தொழிலமைச்சர் நிமல் சிறிபால

பா.கிருபாகரன், ந. ஜெயகாந்தன்



வீட்டுப் பணிப்பெண்களுக்கும் ஊழியர் சேமலாப நிதி(ஈ.பி.எவ்) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியைப்(ஈ.ரி.எவ்) பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொழிலமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்..

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாஇதனை தெரிவித்தார்.

காப்புறுதி முகவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச சபையில் கேள்வி ஒன்றை முன்வைத்தார். அதற்கு பதிலளித்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறுகையில்,

காப்புறுதி முகவர்களின் பிரச்சினைகளுக்கு நீதியான தீர்வு ஒன்றை பெற்றுக்கொடுப்பதற்கே தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது. அது தொடர்பில் காப்புறுதி நிறுவனங்களுடன் தொழில் அமைச்சு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதுடன் இன்றைய தினமும் (நேற்று) பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது.

தொழில் அமைச்சானது அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை நிதி ஆகியவற்றை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் தீர்மானம் ஒன்றை மேற்கொண்டது எனினும் அந்த தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் காப்புறுதி நிறுவனம் நீதிமன்றத்தை நாடியுள்ளது.

அதற்கிணங்க நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிவந்த பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்.

மேற்படி காப்புறுதி முகவர்கள் சம்பளமொன்றை பெற்றுக் கொள்பவர்கள் அல்ல. அவர்கள் தரகுப்பணத்துக்கு வேலை செய்பவர்கள். எவ்வாறெனினும் அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தொழிலமைச்சு உள்ளது.

. இதே வேளை வீட்டுப் பணிப்பெண்களுக்கும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான சட்டம் மூலம் கொண்டுவரப் பட்டுள்ளது என்றார்.

## ஒலுவில் மு.கா முக்கியஸ்தர் மக்கள் காங்கிரஸில் இணைவு



மு.காவின் ஒலுவில் பிரதேச மத்திய குழு செயலாளர் ஆசிரியர் ஹமீட், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் இணைந்துகொண்டார்.

ஞாயிற்றுக்கிழமை நிந்தாவூரில் இடம்பெற்ற நிகழ்வின் போது, மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீனை சந்தித்து, கட்சியில் இணைந்துகொண்டார்.

## சொரகுன மகா வித்தியாலயத்தில் 5 மாணவர்களுக்கு கொரோனா

### வகுப்பறைக் கட்டிடம் மூடப்பட்டது

பதுளை நிருபர்

பதுளை மாவட்டத்தின் சொரகுன மகா வித்தியாலயத்தில் 2,5,10 ஆகிய வகுப்புக்களைக் கொண்ட கட்டிடத்தொகுதி நேற்று செவ்வாய்க்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக, பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் சமன் ஜீவந்த தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட பாடசாலையின் 5 மாணவர்களுக்கு கொரோனா தொற்று உறுதியானதையடுத்தே, குறிப்பிட்ட வித்தியாலயம் மூடப்பட்டது. குறிப்பிட்ட வித்தியாலயத்தில் 40 மாணவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டபோது, குறிப்பிட்ட 5 மாணவர்களுக்கு தொற்று உறுதியாகியுள்ளது. இம் மாணவர்கள் நேற்று கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

### எந்த...

முன்பக்கத் தொடர்ச்சி..

நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்று தொடர்பில் கடந்த டிசம்பர் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நாங்கள் சிறந்த பாடங்களைக் கற்றுக் கொண்டோம். தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு, கடுமையான விதிமுறைகளை அமுல்படுத்தலாமா அல்லது பொது முடக்கத்துக்கு செல்லலாமா என்பதை அரசாங்கமே தீர்மானிக்கின்றது.

ஆனால் கொவிட் தொற்றானது தொடர்ந்து அதிகரித்துச் செல்லுமாயின் வருட இறுதி அல்லது பண்டிகைக் காலப்பகுதிகளில் நாட்டை முடக்குவது அல்லது பயணக்கட்டுப்பாடுகளை விதிப்பது ஆச்சரியமான விடயமல்ல. ஏனெனில் கடந்த காலத்தில் இடம்பெற்ற விடயங்களில் இருந்து நாம் தீவிரமான பாடங்களைக் கற்றுக் கொண்டுள்ளோம்.


எனவே தற்போதைய நெருக்கடி நிலையினை கருத்தில் கொண்டு நாட்டை முடக்காமல் இருப்பதற்கு தேவையான அனைத்து சுகாதார வழிமுறைகளையும் பின்பற்றப்படுவதை அனைத்து தரப்பினரும் உறுதிப்படுத்துவது அவசியமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தொடர்ச்சியாக தினசரி 700 க்கும் அதிகமான கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதுடன் 20 க்கும் அதிகமான மரணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. இதேவேளை அதிகமான பாடசாலை மாணவர்களும் தொற்றுக்கு உள்ளாகும் நிலை காணப்படுவதுடன் புதிய திரிபுகளும் அடையாளம் காணப் பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தினசரி கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 500 - 700 ஆக காணப்பட்டதுடன் தினசரி 5 - 10 வரையான மரணங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. எனினும் இவ்வாண்டு குறித்த எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையினை அவதானிக்க முடிகின்றது.

## அக்கரப்பத்தனை தோட்டத்தில் 1500 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்





பத்தனை நிருபர்

அக்கரப்பத்தனை பெருந்தோட்டத்துக்குட்பட்ட அல்பியன் தோட்டத்தைச் சேர்ந்த ஆட்லோ, பிரண்டன், சின்னநாகவத்தை, நியுபிரண்டன் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 1500 க்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் நேற்று தொழிலுக்குச் செல்லாமல் தொழில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து சின்ன நாகவத்தை தொழிற்சாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்தால் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்துவதாகவும், தேயிலை மலைகள் காடாகி கிடப்பதாகவும் கொழுந்து விளைச்சல் குறைவாக இருப்பதால் தற்போது தோட்ட நிர்வாகம் ஒரு நாள் சம்பளத்திற்கு 20 கிலோ கட்டாயமாக பறிக்க வேண்டுமெனவும் நல்ல கொழுந்து எடுத்து கொடுக்க வேண்டுமென தோட்டத் தொழிலாளர்களுக்கு அழுத்தம் கொடுத்து வருவதோடு குறைவாக கொடுத்தால் கிலோ கணக்கில் சம்பளம் தருவதாகவும் இதனால் தொழில் ரீதியாக பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும் தோட்ட அதிகாரி முறையாக தோட்டத்தை வழி நடத்தவில்லை என தெரிவித்தும் தொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

காலை 9 மணி முதல் பகல் 12 மணிவரை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அதிகாரிகளும் அக்கரப்பத்தனை பிரதேச சபை தவிசாளர், உறுப்பினர்கள் வருகை தந்ததுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஏ. பி. சக்திவேல் சம்பவ இடத்திற்கு வருகை தந்து அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய சலுகைகளை உடனடியாக வழங்குமாறு தேயிலை மலைகளை துப்பரவு செய்யுமாறும் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் தோட்ட அதிகாரி இதற்கு ஏற்றுக்கொண்டதை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கலைந்து சென்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கூட்டு ஒப்பந்தம் இல்லாத காரணத்தினால் பல சிரமங்களை எதிர்நோக்குவதாக கூட்டு ஒப்பந்தத்தை மீண்டும் வேண்டும் எனவும் பேச்சுவார்த்தைகளை சும்மா நடத்தாமல் முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேட்டுக் கொண்டதுடன் தமக்கு ஆயிரம் ரூபா சம்பளம் இதுவரை முறையாக கிடைக்கவில்லை எனவும் குறிப்பிட்டதுடன் , தோட்டங்களை நடத்த முடியாவிட்டால் தமக்கு வழங்குமாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேட்டுக்கொண்டனர்.

**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்**

**1AB, 1C பாடசாலைகளுக்குரிய அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்**

**கீழ்க்குறிப்பிடப்படும் வலயக் கல்வி அலுவலகங்களில் உள்ள 1AB, 1C பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் வடமாகாண கல்வி அமைச்சினால் கோரப்படுகின்றன.**

இப்பதவிக்கு வடமாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1 மற்றும் வகுப்பு 2 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் வலயக் கல்வி அலுவலகங்களில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் 2021.12.07 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக "செயலாளர், கல்வி அமைச்சு, வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்," என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 03 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
2. இலங்கை அதிபர் சேவை 1 இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் இலங்கை அதிபர் சேவை 2 ஐச் சேர்ந்தவர்களில் தெரிவு மேற்கொள்ளப்படும்.
3. தற்போது கடமையாற்றும் பாடசாலையில் (1AB, 1C) அதிபராக 03 வருட காலம் சேவையை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
4. மாகாணக் கல்வி அமைச்சின் "அதிபர் வெற்றிடம் நிரப்புதல்" சுற்றுநிருப இல 2021/01 இற்கு அமைய தெரிவு மேற்கொள்ளப்படும்.

கல்வி அமைச்சின் நேர்முகத் தேர்வுச் சபையின் நேர்முகப்பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்பட்டு, சேவை நிலையம் வழங்கப்படும். மேற்படி தெரிவு செய்தல் தொடர்பாக வட மாகாணக் கல்விச் செயலாளரின் தீர்மானம் இறுதியானதாகும்

**விண்ணப்பம் கோரப்படும் பாடசாலைகள்**

| இல | வலயக்கல்வி அலுவலகம் | பாடசாலை | பாடசாலை வகை |
|---|---|---|---|
| 01 | முல்லைத்தீவு | மு/கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயம் | 1C |
| 02 | | மு/அளம்பில் றோ.க.மகா வித்தியாலயம் | 1C |
| 03 | தென்மராட்சி | யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி | 1AB |
| 04 | | யா/வரணி மத்திய கல்லூரி | 1AB |
| 05 | மடு | மன்/கருங்கண்டல் றோ.க.த.மகா வித்தியாலயம் | 1C |
| 06 | | மன்/நட்சணாமருதமடு அ.த.க.பாடசாலை | 1C |
| 07 | வடமராட்சி | யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி | 1AB |
| 08 | யாழ்ப்பாணம் | யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி | 1C |
| 09 | | யா/பாசையூர் சென்.அன்ரனீஸ் றோ.க.மகளிர் பாட-சாலை | 1C |
| 10 | | யா/வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம் | 1C |
| 11 | வவுனியா தெற்கு | வ/பூவரசங்குளம் மகா வித்தியாலயம் | 1AB |
| 12 | மன்னார் | மன்/பண்டாரவெளி அ.மு.க.பாடசாலை | 1C |

24.11.2021

ஐ.இளங்கோவன்,செயலாளர்.

தினக்குரல்

THINAKKURAL

An Independent Daily Voice in Tamil

ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,
இல.185, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு - 14.

தொலைபேசி இலக்கம்: 011 7322760, 011 7322761, 011 7322797
daily@thinakkural.lk, chiefeditor@thinakkural.lk
Circulation - 011 7322776 Email : cm@thinakkural.lk
Advertising - 011 7322775 Email : advt@thinakkural.lk

புதன்கிழமை 24 நவம்பர் 2021 Wednesday 24th November 2021

## நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை மருத்துவ ஆலோசனையின்றிப் பயன்படுத்துதல்

கொரோனா வைரஸ் தொற்றுநோயிலிருந்து குணமடைவதற்கு மருத்துவர்களின் பரிந்துரையின்றி நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை பயன்படுத்துவது பாரதூரமான உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்துமென இலங்கை நுண்ணுயிரியலாளர்கள் கல்லூரி எச்சரித்திருக்கிறது. நுண்ணுயிர் எதிர்ப்புகளின் தேவையற்றதும் மிகையானதுமான பயன்பாடு காரணமாக 'நுண்ணுயிர் எதிர்ப்பு' மருந்துகளின் வீரியம் குறைவடைந்துவருவது இப்போது உலகளாவிய சுகாதார நெருக்கடியாக உருவாகி வருகிறது. வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த அதிக எண்ணிக்கையிலான மக்கள் நுண்ணுயிர் எதிர்ப்புகளைப் பயன்படுத்துகின்றனர், இதனால் முன்னர் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளைப் பயன்படுத்தி சிகிச்சையளிக்கப்பட்ட நோய்களைக் கட்டுப்படுத்த முடியாதென்று இலங்கை நுண்ணுயிரியலாளர்கள் கல்லூரியின் தலைவரும் சிகிச்சைக்கான ஆலோசகருமான நுண்ணுயிரியலாளர் டாக்டர் கீதிகா பட்டபெந்திகே தெரிவித்திருக்கிறார். நுண்ணுயிர் எதிர்ப்புகளின் தவறான பயன்பாடு மற்றும் அதிகப்படியான பயன்பாடு ஆகியவற்றின் விளைவாக 2050 ஆம் ஆண்டளவில் சுமார் 1 கோடி மக்கள் நுண்ணுயிர் எதிர்ப்புகளை எதிர்க்கும் பக்டீரியாக்களுக்கு பலியாவார்கள் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்திருக்கிறது.

நுண்ணுயிர் எதிர்ப்புகளை அதிகப்படியாக பயன்படுத்துதல் பக்டீரியாவைச் சமாளிப்பதை கடினமாக்குகிறது என்று பல தசாப்த காலமாக நிபுணர்கள் எச்சரித்து வருவதையடுத்தே அழிக்க அல்லது பெருகாமல் இருக்க மருந்துகள் உருவாக்கப்பட்டன. 1928 இல் கண்டுபிடிக்கப்பட்ட பென்சிலின் மருந்தே, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்ட முதல் நுண்ணுயிர் எதிர்ப்பு ஆனது. ஆனால் காலப்போக்கில், நுண்ணுயிர் எதிர்ப்புகளால் பக்டீரியாக்களின் பரவலான அழிப்பும் மற்றும் எதிர்ப்புத் தன்மை குறைவடைந்ததும் பக்டீரியா பரவுவதற்கு இடமளித்தது. நுண்ணுயிர் எதிர்ப்பு - எதிர்ப்பு கிருமிகள் வழமையாக மருந்துகளால் பாதிக்கப்படக்கூடிய பக்டீரியாக்களுக்கான அவற்றின் பாதுகாப்பையும் மாற்றிக்கொள்ள முடியுமென்றும் நாம் பார்க்கும் பெரும்பாலான எதிர்ப்புகள், எதிர்ப்பை மாற்றும் அந்தத் திறன் காரணமாக குறிப்பாக வேகமாக பரவும் மற்றும் அபாயகரமானவை என்று நுண்ணுயிரியலாளர் கிறிஸ்டியன் லெஸ்டரின் கூறுவதாக ஏ.எவ் பி. செய்திச் சேவை குறிப்பிட்டிருந்தது. இதன் பெறுபேறாக, நுண்ணுயிர் எதிர்ப்புகள் நோய்த்தொற்றுகளுக்கு எதிராக குறைவான விளைவைக் கொண்டனவாக உருவாகின்றன.

நுண்ணுயிர் எதிர்ப்புக்கான அண்டிபயோடிக் எதிர்ப்பு என்பது ஒரு இயற்கையான நிகழ்வாகும். ஆனால் சக்தி வாய்ந்த மருந்துகளின் பரவலான பயன்பாடு மற்றும் அதிகப்படியான பயன்பாடு மூலம் மனிதர்கள் அந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளனர். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு, வளர்ச்சியடைந்த நாடுகள் பருவகால காய்ச்சலுக்கு சிகிச்சையளிக்க நுண்ணுயிர் எதிர்ப்புகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து எச்சரிக்கத் தொடங்கின. இது ஒரு வைரஸால் ஏற்படுகிறது, பக்டீரியாவால் அல்ல. 2010 அளவில், செல்வந்த நாடுகளில் மனிதர்களில் நுண்ணுயிர் எதிர்ப்புகளின் பயன்பாடு உறுதிப்படுத்தப்பட்டது. இருப்பினும் வளர்ந்துவரும் நாடுகளில் அவற்றின் பரவல் அதிகரித்து வருகிறது. மக்கள் மருந்துகளுக்கான சிறந்த அணுகலைப் பெறுகிறார்கள். அமெரிக்காவில் உள்ள ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் 2018 ஆம் ஆண்டு அறிக்கையின்பிரகாரம், 2000 முதல் 2015 வரை நுண்ணுயிர் எதிர்ப்புகளின் உலகளாவிய பாவனை 65% அதிகரித்துள்ளது. இது குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் உள்ள பயனாளிகளால் இயக்கப்படுகிறது. கொவிட் 19 நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்த மருத்துவர்களின் பரிந்துரை இல்லாமல் நுண்ணுயிர் எதிர்ப்புகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு நுண்ணுயிரியலாளர் டாக்டர் கீதிகா பட்டபெந்திகே பொது மக்களை வலியுறுத்தியிருக்கிறார்.

மனிதர்கள், விலங்குகள் மற்றும் தாவரங்களில் தொற்றுநோயைத் தடுக்கவும் சிகிச்சையளிக்கவும், பங்கசு எதிர்ப்பு மருந்துகள், நுண்ணுயிர் எதிர்ப்புகள் பயன்படுத்தப்படுகின்றன. பக்டீரியா, வைரஸ்கள், பங்கசு மற்றும் ஒட்டுண்ணிகள் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றன, மேலும் அவை ஏற்படுத்தும் நோய்த்தொற்றுகளுக்கு சிகிச்சையளிக்க பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கு இனி பதிலளிக்காதென கூறப்படுகிறது. இந்த நுண்ணுயிர் எதிர்ப்புகளுக்கான எதிர்ப்பு நோய்த்தொற்றுகளுக்கு சிகிச்சையளிப்பதை கடினமாக்குகிறது. இது நோய் பரவல், கடுமையான நோய் மற்றும் மரணத்திற்கான அபாயத்தை அதிகரிக்கிறது. இது இயற்கையாகவே பொதுவாக மரபணு மாற்றங்கள் மூலம் வெளிப்படுகிறது. மனிதர்கள், கால்நடைகள் மற்றும் விவசாயத்தில் நுண்ணுயிர் கொல்லிகளின் அதிகப்படியான பயன்பாடும் தவறான பயன்பாடும் நுண்ணுயிர் எதிர்ப்புகளின்செயற்படாத தன்மையை துரிதப்படுத்தியுள்ளன. சளி, காய்ச்சல், பெரும்பாலான இருமல் மற்றும் தொண்டைப் புண் போன்ற வைரஸ் தொற்றுகளுக்கு எதிராக நுண்ணுயிர் எதிர்ப்புகள் பயனுள்ளவையாக இல்லை. நுண்ணுயிர் கொல்லிகளுக்கான எதிர்ப்பை "உலகளாவிய ஆரோக்கியம், உணவுப் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான மிகப்பாரிய அச்சுறுத்தல்களில் ஒன்று" என்று உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளமை கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயம்.

# உள்சார் கட்டமைப்பு நாட்டுக்கு முதலீடுகளைக் கொண்டுவரும்

## கப்ரால் கூறுகிறார்



எங்களிடம் பொருளாதார ஸ்திரத்தன்மை உள்ளது. அதேபோல குறைந்த வட்டி வீதமானது ரூபாவின் மதிப்பு மேலும் வீழ்ச்சியடையாமல் தடுக்கின்றது. நாங்கள் ஏற்கனவே பெரும்பாலான வர்த்தகங்களைப் பார்த்திருக்கிறோம். குறிப்பாக பெரியவை வளர்ந்துள்ளன. மேலும் சிறு வணிகங்களும் நன்றாக செயற்பட முடிந்தால் அப்போது நாம் முழுமையான மீட்புக்கான பாதையில் செல்வோமென நான் நினைக்கிறேன். சுற்றுலாவும் அதன் ஆதரவை அளித்தவுடன் மீண்டும் எழுச்சிபெறத் தொடங்கும் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் உங்களுக்குத் தெரியும், சுமார் 500,000 பேர் சுற்றுலாவை அவர்களின் பிரதான வாழ்வாதாரமாக நம்பியுள்ளனர். அதே நேரத்தில், ஏனைய வருமானம் மற்றும் நன்மைகளைத் தவிர, சுற்றுலாத் துறையில் இருந்து மறைமுகமாக அனுகூலங்களை பெறுபவர்களும் பலர் உள்ளனர். சில சமயங்களில் ஏற்படும் விளைவுகளால் மக்கள் உடனடியாக ஏமாற்றமடைவார்கள். ஆனால் காலப்போக்கில் எந்தவொரு அரசாங்கமும் செய்ய முடியாத அளவுக்கு இந்த அரசாங்கம் சிறப்பாகச் செய்துள்ளது என்பதை மக்கள் புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன். இவ்வாறு நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தனது கருத்துக்களை தெரிவித்துள்ளார். டெய்லி மிரர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார். பேட்டி வருமாறு:

**Q நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மக்கள் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பது இரகசியமல்ல. இந்த மிகவும் ஆபத்தான சூழ்நிலையில், 2022 பட்ஜெட்டில் இருந்து என்ன நிவாரணத்தை மக்கள் எதிர்பார்க்க முடியும்?**

பதில்: நீங்கள் சொல்கின்ற, நாட்டில் வியாபித்திருக்கும் தூரமான சூழ்நிலையும் சவாலான சூழ்நிலையும் சரிதான். இது உலகின் ஏனைய சகல நாடுகளிலும் காணப்படுவதும் உண்மை தான். அதேநேரத்தில் எமது பொருளாதாரத்தின் மீது ஸ்திரத்தன்மையையும் நம்பிக்கையையும் கொண்டுவருவதை உறுதி செய்வதுதான் இன்றைய தேவை. அவ்வாறு செய்யும்போது, நாம் ஏற்படுத்தியிருக்கும் பொருளாதாரக் கட்டமைப்பு புதிய முதலீடுகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஈர்ப்பதை உறுதி செய்து, அதேநேரத்தில் பொருளாதாரச் செயற்பாடுகள் நிலைத்து நிற்கும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். நாங்கள் அதைச் செய்தால், நாங்கள் அதை வெற்றிகரமாகச் செய்துள்ளோம் என்று நான் நம்புகிறேன். இலங்கையின் பொருளாதாரம் மீண்டுமொரு முறை மீட்சியடையும் பாதையில் செல்வதை நீங்கள் காண்பீர்கள்.

இந்த ஆண்டு சுமார் 5% வளர்ச்சி வீதம் இருக்கும். முதல் அரையாண்டில் நிகர தேசிய உற்பத்தியில் வளர்ச்சி 8% ஆக இருந்தது. முழு ஆண்டில் அது 5% ஆக இருக்கும். இது மோசமான வளர்ச்சியல்ல. இதன் மூலம் எம்மிடம் பொருளாதார ஸ்திரத்தன்மை உள்ளது. அதேபோல் குறைந்த வட்டி வீதமும் ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடையாமல் தடுக்கின்றது. நாங்கள் ஏற்கனவே பெரும்பாலான வர்த்தகங்களைப் பார்த்துள்ளோம். குறிப்பாக பெரிய நிறுவனங்கள் வளர்ந்துள்ளன. மேலும் சிறு வணிகங்களும் நன்றாக செயற்பட முடிந்தால் அப்போது நாம் முழுமையாக மீட்சியடைவதற்கான பாதையில் செல்வோம் என்று நினைக்கிறேன்.

**Q இந்த இலக்கை அடைவதற்கு அரசாங்கத்தின் உபாயம் என்ன?**

பதில்: பல உள்ளன. ஒன்று நம்பிக்கையையும் ஸ்திரத்தன்மையையும் உருவாக்குவதாகும். மற்றொன்று, தற்போதைய சூழ்நிலையை தெளிவாகவும் சுருக்கமாகவும் கையாள்வதன் மூலம் மக்களுக்கு நம்பிக்கை கிடைக்கும். இவை இரண்டையும் இப்போது செய்து வருகிறோம். உங்களுக்குத் தெரியும், மத்திய வங்கி ஆறு மாத திட்டத்தை வகுத்துள்ளது. அதில் எங்கள் இலக்குகள் மற்றும் நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்பது தெளிவாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது. 2022 பட்ஜெட் முன்மொழிவுகளில் அரசாங்கம் அதை வெளிப்படுத்தும். இந்த ஏற்பாடுகள் அனைத்தும் பங்குதாரர்களால், சம்பந்தப்பட்டவர்களால் புரிந்துகொள்ளப்பட்டவுடன், அனைவரும் அதைச் செய்வதில் உறுதிப்பாட்டுடன் இருப்பார்கள் என்பதால், மீட்சியடைதல் இன்னும் வேகமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

**Q பொருளாதாரத்தில் மீண்டும் எழுச்சி பெற்று மக்கள் எப்போது நிம்மதிப் பெருமூச்சு விடுவார்கள்?**

பதில்: சுற்றுலாவும் அதன் ஆதரவை அளித்தவுடன் மீண்டும் எழுச்சி பெறத் தொடங்கும் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் சுமார் 500,000 மக்கள் சுற்றுலாவை அவர்களின் முக்கிய வாழ்வாதாரமாக நம்பியுள்ளனர். அதேநேரத்தில், ஏனைய வருமானம் மற்றும் அனுகூலங்களைத் தவிர, சுற்றுலாத்துறையில் இருந்து மறைமுகமாக சம்பாதிப்பவர்கள் பலர் உள்ளனர். சுற்றுலாவும் தேவையான அந்நியச் செலாவணியை வழங்குகிறது. எனவே, அந்த ஆதரவு வழங்கப்பட்டவுடன், மீள் எழுச்சி மிகவும் தெளிவானதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அதைத்தான் நாங்கள் மிக விரைவாக செய்வதற்கு முயற்சிக்கிறோம். இதனால் நாடு மீண்டும் திறப்பதற்கு தயாராக உள்ளது.

**Q சர்வதேச நாணய நிதியத்திலிருந்து 787 மில்லியன் அமெரிக்க டொலர்கள், பரிவர்த்தனை ஏற்பாடாக பங்களாதேஷ் வங்கியிடமிருந்து 150 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து 2 பில்லியன் ரென் மின் பி பெறுமதியான 308 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வசதி மூலம் மொத்தம் 1.2 பில்லியன் டொலருக்கும் மேற்பட்ட தொகையானது ரூபாயின் மதிப்பை உயர்த்தத் தவறிவிட்டது. ஏன்?**

பதில்: சுற்றுலா நடவடிக்கைகளின் வீழ்ச்சியால் நாம் அனுபவிக்கும் அந்நிய செலாவணி வருவாயின் இழப்பை உண்மையில் ஈடுசெய்வதற்கு இந்த வரவுகள் முக்கியமானவை. அதனால்தான் ரூபாவின் மதிப்பை உயர்த்துவதற்கு அது அதிக பங்களிப்பை கொண்டிருக்கவில்லை. ஆனால் காலப்போக்கில் சுற்றுலா வேகம் பெற்றவுடன், ரூபாவின் மதிப்பு அதிகரிப்பதைக் காண்போம். ஏனெனில் தற்போது ரூபாவின் மதிப்பு அதிகரிப்பதற்கு அதிகளவிற்கு இடம் உள்ளது. இறக்குமதியின் கட்டுப்பாடுகளில் சமநிலையை பேணவும் இது எங்களுக்கு உதவியது.

**Q கொவிட் 19 தொற்றுநோயானது, தொழில், சுற்றுலா, விவசாயம், ஆடை மற்றும் ஆடை ஏற்றுமதி, சுகாதாரம், கல்வி உட்பட பலவற்றில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலிருந்தும் முன்னொரு போதும் இல்லாத வகையில் ஏற்றுமதி, வருவாய் ஆகியவற்றை கடுமையாகப் பாதித்துள்ளது. பல சர்வதேச பொருளாதார நிபுணர்களால் உலகப் பொருளாதாரம் பற்றிய முன்னறிவிப்பு என்னவென்றால், தொற்றுநோய் அடங்கியவுடன் உலகப் பொருளாதாரம் விரைவான முன்னேற்றத்தை அடையுமென்பதாகும். இந்த சவாலை எதிர்கொள்ள இலங்கையின் தயார் நிலை எவ்வாறு உள்ளது?**

பதில்: தொற்றுநோய் பரவினாலும் கூட, இலங்கை அதன் ஏற்றுமதி, பணம் அனுப்புதல் மற்றும் பல துறைகள் தொடர்பாக நியாயமான முறையில் சிறப்பாக செயற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கொவிட் 19 இன் விளைவாக பல இடைவெளிகள் திறக்கப்பட்டுள்ளன மற்றும் பல துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஆனால் கொவிட் தாக்கம் குறைக்கப்பட்டவுடன் பல நாடுகள் தங்கள் பொருளாதாரத்தில் கூர்மையான மற்றும் விரைவான எழுச்சியை அனுபவிக்க முடியும். இலங்கையும் வேறுபட்டதாக இருக்காது. சுற்றுலா வளர்ச்சியடைந்தவுடன், ஏற்கனவே கட்டமைப்பு இருப்பதால், மகத்தான முன்னேற்றத்தைக் காண்போம் என்று தனிப்பட்ட முறையில் நான் நம்புகிறேன். சுற்றுலாத் தலங்கள், ஹோட்டல்கள், வாகனங்கள், உள் கட்டமைப்பு வழிகாட்டிகள் மற்றும் அனைத்தும் உள்ளன. சுற்றுலாப் பயணிகள் வரத் தொடங்கியவுடன், அவர்களுக்கு சேவையை வழங்குவதற்கான ஆற்றல் எங்களிடம் உள்ளது. அதாவது, பெருமளவிலான அந்நியச் செலாவணி வருவது உடனடியாகஇடம்பெறும். அதற்காக நாம் விடாமுயற்சியுடன் செயற்பட வேண்டும்.

**Q பொருளாதாரத்தில் ஒட்டுமொத்த பரிவர்த்தனைகளின் மதிப்பைப் பொறுத்து எந்தவொரு நாட்டிலும் பணம் அச்சிடப்படுகிறது. மொத்த பண விநியோகத்தின் அதிகரிப்புக்கு ஏற்றவாறு பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் வளர்ச்சியை எதிர்கொள்ள நாடுகள் பணத்தை அச்சிடுவது பொதுவானது. பொருளாதாரத்தின் அடிப்படைகளில் ஒன்று, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு இணையாக பணம் அச்சிடுவது அவசியம். 2020/2021 காலப்பகுதியில் மட்டும் அரசாங்கம் 2 டிரில்லியன் ரூபாவுக்கு மேல் அரச செலவினங்களுக்கு நிதியளித்துள்ளது. இது அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகள் மற்றும் வாழ்க்கைச் செலவு ஆகியவற்றின் கடுமையான அதிகரிப்புக்கு பங்களிப்பு செலுத்தியுள்ளது. உங்கள் கருத்து என்ன?**

பதில்: பொருளாதாரத்தின் அடிப்படைத் தன்மைகளை சரியாகச் சொல்லியிருக்கிறீர்கள். நான் அதைமறுக்கவில்லை. ஆனால் இந்த அடிப்படைகள் சில அனுமானங்களின் அடிப்படையிலும் உள்ளன. அந்த இயல்பையும் நாம் அனுபவிக்கிறோம். ஆனால் இன்று அந்த இயல்புநிலையை நாம் அனுபவிக்கவில்லை. அதனால்தான் தற்போதைய அசாதாரண சூழ்நிலையை சமாளிக்க சில புதிய நடவடிக்கைகளை நாங்கள் எடுக்கவேண்டியுள்ளது. பல நாடுகளும் அதனை மேற்கொண்டிருந்தன. அதற்கு இலங்கை விதிவிலக்கல்ல. மத்திய வங்கியின் பிரத்தியேகமானதும் வழமையானதுமான பிரச்சினைகளுக்கு நாங்கள் தீர்வுகாண வேண்டியிருந்தது. நீங்கள் பொதுவான பேச்சில் 'பணம் அச்சிடுதல்' என்று கூறுகிறீர்கள். ஆனால் அதிலிருந்தும் பின்வாங்க வேண்டிய நேரத்தில் நாம் அதைச் செய்ய வேண்டிய நிலையில் இருப்போம் என்பதை முதலில் உணர்ந்துகொள்வதுதான் முக்கியம். இது ஒரு சத்திரசிகிச்சை நிபுணரால் செய்யப்பட வேண்டிய ஒரு தீவிர சத்திர சிகிச்சை போன்றது என்று நான் நினைக்கிறேன். சத்திரசிகிச்சை நிபுணர் வெட்டுவார், எப்படி மீண்டும் தைப்பது என்பது அவருக்குத் தெரியும். உங்களை வெட்டுவதற்கு மற்றவர்களை அனுமதித்தால், அவர்கள் வெட்டுவார்கள். ஆனால் உங்களை எப்படி தைப்பது என்று அவருக்குத் தெரியாது. பின்னர் நீங்கள் கடுமையான சிக்கலில் இருப்பீர்கள். எனவே, சத்திரசிகிச்சை நிபுணரால் சத்திர சிகிச்சை செய்யப்படுகிறது, அதை எந்த நேரத்தில் பின்வாங்குவது என்பது அறுவை சிகிச்சை நிபுணருக்குத் தெரியும். இதனால் எந்தவித அசம்பாவித நிலைமையும் ஏற்படாது என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். ஆனால் நாங்கள் கவனமாக இருப்போம், அடுத்த சில மாதங்களில் இது கையாளப்படும் என்பதை உறுதிப்படுத்துவோம்.

**Q சீனி மீதான இறக்குமதி வரி இந்த ஆண்டு தொடக்கத்தில் ஒரு கிலோவுக்கு 50 ரூபாயிலிருந்து 25 சதத்தால் குறைக்கப்பட்டது என்பது உறுதியான உண்மை. இது ஒரு சில ஆட்சி நட்புவர்த்தகர்களுக்கு மட்டுமே பயனளித்தது. வரி குறைப்புகளால் திறைசேரிக்கு ஒரே நேரத்தில் 15.9 பில்லியன் ரூபா இழப்பு பொருளாதாரம் மோசமான நிலையில் உள்ளபோது ஏற்பட்டது. இந்த நடவடிக்கை இந்தசீனி முதலாளிகளால் சீனி விலையை மிகவும் நியாயமற்ற அளவிற்கு பதுக்கிவைப்பதற்கும் உயர்த்துவதற்கும் பங்களித்துள்ளது. கொள்ளையர்களுக்கு எதிராக அரசு இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஏன்?**

பதில்: நெருக்கடியான நேரத்தில், பல வர்த்தகர்கள் தாங்கள் செய்ய வேண்டியதை விட கூடுதல் பணம் சம்பாதிக்க முயற்சி செய்கிறார்கள். இது சர்க்கரை சீனி வியாபாரிகளிடம் மட்டுமல்ல, கிராமத்தில் உள்ள சிறு முதலாளிகளிடமும் உள்ளதென்பது உண்மை. அவர்கள் இயற்கையாகவே சூழ்நிலையை பயன்படுத்தி வேகமாகப் பணம் சம்பாதிக்கின்றார்கள். இது ஒரு உலகளாவிய நடவடிக்கை என்பதால் இது மிகப்பெரிய உலக சந்தையின் அனுபவம் வாய்ந்தது. பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படும் போது குறிப்பிட்ட சிலர் பணம் சம்பாதிக்கின்றனர். உலக சந்தையில் சீனி விலை அதிகரித்து வருவதால் நுகர்வோருக்கு நன்மை பயக்கும் வகையில் மனிதாபிமான நடவடிக்கையாக சர்க்கரை, சீனி மீதான வரியை குறைக்கும் அரசின் முயற்சி. துரதிஷ்டவசமாக, சில பெரிய வர்த்தகர்களால் கூடுதல் இலாபம் ஈட்டுவதற்காக உள்நாட்டு சந்தையில் சீனிப் பற்றாக்குறையை உருவாக்க பயன்படுத்தப்பட்டது. ஆனால் சீனி இறக்குமதி மீதான வரியை குறைக்க அரசு எடுத்த நடவடிக்கை எந்த ஒரு குறிப்பிட்ட வர்த்தகருக்கும் ஆதரவாக வடிவமைக்கப்படவில்லை. சீனி இறக்குமதி மீதான வரி குறைப்பு என்பது மக்களுக்கு நன்மை பயக்கும் ஒரு மனிதாபிமான நடவடிக்கையாகும். வரிக் குறைப்பினால் மக்களுக்கு உண்மையில் பயன் இல்லை என்று யாராவது சொன்னால், அரசாங்கம் மீண்டும் சீனிக்கு வரி விதித்தால், நாளை ஒரு கிலோ சீனி குறைந்தபட்சம் ரூ. 50 அல்லது அதற்கு மேல் அதிகரிக்கும். அதனால்தான் வரிக் குறைப்பு அல்லது விலைக் குறைப்பு காலங்களில், அரசாங்கத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அதன் பயன் நுகர்வோருக்கு விரைவாகக் கிடைப்பதில்லை. எனினும், இன்று வரிகள் அதிகரிக்கப்பட்டால் அது நாம் எதிர்பார்ப்பதை விட வேகமாக நுகர்வோருக்குச் சென்றுவிடும். எனவே இந்த விடயங்களில் இந்த கடினமான சமநிலையை நாம் பராமரிக்க வேண்டும். ஆனால், திறைசேரிக்கு ரூ.15.9 பில்லியன் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கூறுவது முற்றிலும் சரியாக இருக்காது. முக்கிய காரணம், திறைசேரி சில சமயங்களில் வரிகளை குறைக்க முடிவெடுக்கலாம், இல்லையெனில் மக்கள் அதிகம் பாதிக்கப்படலாம். கடந்த அரசாங்கம் வரிகளை அதிகரித்து மக்கள் மீது சுமையை ஏற்றியதைப் போன்றல்லாமல் அரசாங்கம் எடுத்த ஒரு உணர்வுபூர்வமான முடிவு இதுவாகும்.

**Q வரி குறைப்பு சராசரி நுகர்வோருக்கு உதவியிருக்கிறது என்பது உங்கள் கருத்து. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வரி குறைப்பு இல்லை என்றால், உள்நாட்டு சந்தையில் சீனியின் விலை இன்றைய விலையை விட அதிகமாக இருந்திருக்கும்?**

பதில்: முற்றிலும், நான் அந்த கருத்தை எடுத்துக்கொள்கிறேன். ஏனெனில் அது மிகவும் வெளிப்படையானது. சீனி இறக்குமதிக்கான வரியை அரசு உயர்த்தினால், ஒரே இரவில் சீனி விலை உயரும். வரி குறைப்பால் இது தடுக்கப்பட்டுள்ளது.

**மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் பிரதான சந்தேக நபரான அர்ஜுனா மகேந்திரன் சிங்கப்பூருக்குத் தப்பிச் சென்றதற்கு எதிராக அரசாங்கம் அநாகரீகமான முறையில் மெதுவாக நடவடிக்கை எடுத்து வருகிறது. 2015 இல் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக அவரைத் தேர்ந்தெடுத்து, மத்திய வங்கியை கொள்ளையடிக்க அந்த நபருக்கு உதவிய அரசியல்வாதி இன்னும் தலைமறைவாக இருக்கிறார். அவர்களுக்கு எதிராக விரைவான சட்ட நடவடிக்கை எடுப்பது என்பது ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் வாக்குறுதியாகும். அரசாங்கத்தின் உயர்மட்டப் பிரிவினரும் வங்கிக் கொள்ளையில் ஈடுபட்ட சந்தேக நபர்களும் தங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் உதவுவதற்காக ஒப்பந்தம் போட்டுள்ளனர் என்று நம்புவதற்கு இந்நாட்டு மக்களுக்கு முழு உரிமையுண்டு. நீங்கள் என்ன சொல்ல வேண்டியுள்ளது?**

பதில்: இவர்களை கைது செய்வதற்கும் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும் சட்டத்தின் செயல்முறை விரைவாக இல்லாதது தான் நான் தனிப்பட்ட முறையில் ஏமாற்றமடைகிறேன். ஆனால் எமது மக்கள் நாட்டின் சட்டத்தை பின்பற்ற வேண்டும் என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

(07 ஆம் பக்கம் பார்க்க...)




# குறிஞ்சாக்கேணி பால படகு சேவைக்கு நெடுஞ்சாலை அமைச்சின் எந்தவொரு அனுமதியும் பெறப்படவில்லை

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் விசனம்

குறிஞ்சாக்கேணி பாலபடகு சேவைக்கு நெடுஞ்சாலை அமைச்சின் அதிகாரிகளிடமிருந்து எந்தவொரு அனுமதியும் பெற்றுக்கொள்ளப்படவில்லை என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் எம்.பி.யுமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை குறிஞ்சாக்கேணி பால படகு விபத்து தொடர்பில் கருத்தை முன்வைக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

குறிஞ்சாக்கேணி பாலத்தை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்தமைக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். எனினும் தற்போது விபத்துக்குள்ளாகியிருக்கும் குறிஞ்சாக்கேணி பால படகு சேவைக்கு நெடுஞ்சாலை அமைச்சின் அதிகாரிகளிடமிருந்து எந்தவொரு அனுமதியும் பெற்றுக்கொள்ளப்படவில்லை.



வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அடுத்த மாதத்திலிருந்து இலவசமாக படகு சேவையொன்று நடத்தப்படவிருந்த நிலையில், இந்த படகு சேவை அனுமதி பெறப்படாமல் நடத்தப்பட்டமை தொடர்பில் ஆராய வேண்டும்.

இதேபோன்றே 1990 களில் மூதூரிலும் படகு ஒன்று கவிழ்ந்து 150 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமையையும் நான் நினைவூட்டுகின்றேன் என்றார்.

# நான் மரக்கறிகள் பற்றி கூறினேனே தவிர பெண்களை அவமரியாதை செய்யவில்லை

## ஆளும் கட்சி எம்.பி திஸ்ஸ குட்டியாராச்சி

நான் மரக்கறிகள் பற்றி கூறினேனே தவிர, பெண்களை அவமரியாதைக்கு உட்படுத்தும் வகையில் எதனையும் கூறவில்லை என்று தெரிவித்த ஆளும் கட்சி எம்.பி. திஸ்ஸ குட்டியாராச்சி, நான் வக்கிரப்புத்திக்காரன் அல்லவெனவும், தான் கூறியதைக் கேட்டு தவறாக புரிந்துகொண்டவர்களே வக்கிரப்புத்திக்காரர்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தான் கூறிய கருத்தில் தவறு இருப்பதாக தெரியவில்லை என்றும், அதனால் அது தொடர்பில் தான் மன்னிப்புக் கோர மாட்டேன் எனவும், அவ்வாறு தான் வெளியிட்ட கருத்தில் தகாத வார்த்தை இருப்பதாக தெளிவாக குறிப்பிட்டால் மன்னிப்புக் கோரத் தயார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த 20 ஆம் திகதி வரவு –செலவுத் திட்ட விவாதத்தின் போது, மரக்கறி வகைகளின் பெயர்களை குறிப்பிட்டு திஸ்ஸ குட்டியாராச்சி உரையாற்றுகையில், பெண்களை அவமரியாதைக்குட்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளதாக அவர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் சபையில் நேற்று எழுந்த சர்ச்சையின் போதே திஸ்ஸ குட்டியாராச்சி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது திஸ்ஸ குட்டியாராச்சி மேலும் கூறுகையில்,

'நான் வரவு– செலவுத் திட்டத்தில் உரையாற்றும் போது சில விடயங்களை கூறி உரையாற்றினேன். எனது உரையில் நான் கூறிய தகாத வார்த்தை என்ன என்பதனை எனக்கு தெளிவுப்படுத்துங்கள்' என்றார்.

இதன்போது குறிப்பிட்ட சபாநாயகர், 'உங்களின் உரையின் போது தவறான வார்த்தை பயன்படுத்தியிருந்தால் அது



தொடர்பாக கவலையடைவதாக கூறுங்கள்' என்றார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய திஸ்ஸ குட்டியாராச்சி கூறுகையில்,

எனது வாயால் பெண்களை அவமரியாதைக்குட்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டிருந்தாலே அதற்கு நான் கவலை, மன்னிப்புக் கோர வேண்டும்.

சந்தையில் மரக்கறி வியாபாரி எப்படி அந்தப் பொருளைக் கூறி விற்பார் என்று கூறுங்கள். நான் வக்கிரம் கொண்டவன் அல்ல. அதனை கேட்டுக்கொண்டிருந்தவர்கள் வக்கிரமாக இருந்தால் எனக்கு செய்வதற்கு ஒன்றும் இல்லை. நான் கத்தரிக்காய், வட்டக்காய் பற்றி கூறும் போது எப்படி பெண்களுக்கு அது அவமரியாதையாக அமையும் என கேட்கின்றேன். இது எனக்கு புரியவில்லை.

இந்த பாராளுமன்றத்தில் ரஞ்சன் ராமநாயக்க, ஹிருணிகா போன்றோர் கதைக்கும் போது இந்தப் பெண்கள் எங்கே போனார்கள். எனக்கு இந்த விடயத்தில் அநீதி இழைக்க வேண்டாம். நான் மேலிருந்து கீழ் வரையிலும் எதிர்க்கட்சியினரை தாக்கிப் பேசினேனே தவிர, வேறு விடயங்களை கூறவில்லை. நான் மரக்கறிகள் பற்றி பேசினேனே தவிர பெண்களை அவமரியாதைக்குட்படுத்தும் வகையில் கூறவில்லை. கூறிய நான் வக்கிரப்புத்திக்காரன் அல்ல, கேட்டுக்கொண்டிருந்தவர்கள் வக்கிரப்புத்தியில் இருந்தால் நான் பொறுப்பல்ல.

நான் கூறிய வசனத்தின் தவறு என்ன என்று கூறினால் நான் மன்னிப்புக் கோரத் தயார். உங்கள் வாயாலேயே அதனை கூறுங்கள். நான் அப்போது மன்னிப்புக் கேட்கின்றேன் என்றார்.

இதேவேளை 20 ஆம் திகதி திஸ்ஸ குட்டியாராச்சி வரவு– செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும் போது சபைக்கு தலைமை தாங்கிய அஜித் ராஜபக்ஷ எம்.பி கூறுகையில்,

எனது பெயரை இந்த சபையில் பயன்படுத்தி கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. நான் பார்த்ததையும், கேட்டதையும் கூற வேண்டியுள்ளது.

அன்று குறித்த சம்பவத்தின் போது விவாத நிலைமையொன்று ஏற்பட்டது. சிலர் கூறும் போது அவை அனைத்தும் கேட்பதில்லை. நான் இருக்கும் போது அந்த சபாபீடத்தின் தலைமை ஆசனத்தில் அவ்வாறு அநீதியான முறையில் நடந்துகொண்டதில்லை. அன்று எனக்கு அது கேட்கவில்லை என்பதனை கூறியுள்ளேன் என்றார்.

# தொடர்புபட்டவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - ரிசாத்

குறிஞ்சாக்கேணி பால படகு விபத்துடன் தொடர்புபட்டவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் எம்.பி.யுமான ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை குறிஞ்சாக்கேணி பால படகு விபத்து தொடர்பில் கருத்தை முன்வைக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இதுவரையில் 7 பேர் மரணித்ததாக நாம் அறிகின்றோம். இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் உட்பட 5 மாணவர்களும் மரணித்துள்ளனர். ஒரு பாலத்தை அமைப்பதாக இருந்தால் ஒரு இலட்சம் மக்கள் வாழ்கின்ற அந்தப் பக்கம் 27,000 குடும்பங்களையும் இந்தப் பக்கம் 3000 குடும்பங்களையும் இணைக்கின்ற, இரு பகுதிகளிலும் 11 பாடசாலைகள் இருக்கின்றன .ஒரு நாளைக்கு 8000 மக்கள் சென்று வருகின்ற பாலத்தை போடுகின்ற போது ஒரு பதில் பாதையை ஏற்படுத்தி விட்டுத்தான் பாலத்தை போட வேண்டும். அதுதான் வழமை. இதனை செய்திருந்தால்



இந்த மரணங்கள் நிகழ்ந்திருக்காது.

எனவே வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் அல்லது அங்கிருக்கும் அதிகாரியிடம் யார் இதற்கு பொறுப்பு ? ஏன் இந்த அநியாயம் நடந்தது? என்பதனை கேட்டறிந்து இதனுடன் தொடர்புபட்டவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் உடனடியாக இந்த பாலத்துக்கு பதிலாக மாற்று வழியை ஏற்படுத்துவதுடன், மிக மெதுவாக நடக்கும் பால புனரமைப்புப் பணியை துரிதமாக தேவையானளவுக்கு அதிக நிதியை ஒதுக்குவதுடன், இந்த விபத்துக்கு காரணமானவர்கள் அதிகாரிகளாக இருந்தாலும் அரசியல்வாதிகளாக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்

# இராஜாங்க அமைச்சரின் கேலிச் சிரிப்பினால் இன்று பல உயிர்கள் பலியெடுக்கப்பட்டுள்ளன

## திருகோணமலை மாவட்ட எம்.பி. இம்ரான் மஹ்ரூப்

இராஜாங்க அமைச்சரிடம் கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலத்தை புனரமைத்துத் தருமாறு கோரியபோது அவர் கேலியாக சிரித்தார், அந்த சிரிப்பினால் இன்று பல உயிர்கள் பலியெடுக்கப்பட்டுள்ளனவென ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட எம்.பி.யான இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய வேளையில் விசேட கூற்றொன்றை முன்வைத்தபோதே இவ்வாறு தெரிவித்த இம்ரான் மஹ்ரூப் எம்.பி. மேலும் கூறுகையில்,

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பிரதேசத்தில் இன்று(நேற்று)அனர்த்தமொன்று இடம்பெற்றுள்ளது. குறிஞ்சாக்கேணி பாலம் புனரமைக்கப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த பாதையை நிர்மாணிப்பதற்கு பதிலாக தற்காலிகமாக போடப்பட்ட பாதையில் விபத்தொன்று ஏற்பட்டு தற்போது வரையில் 6 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. பாடசாலை செல்லும் சிறுவர்கள் இதில் உள்ளடங்குகின்றனர்.

இந்த பாலம் புனரமைக்கும் விடயம் குறித்து இதற்கு முன்னரும் நான் இதே



சபையில் கோரிக்கை முன்வைத்தேன். உரிய அமைச்சரிடம் பதில் பாதையொன்று உருவாக்காது எவ்வாறு பால நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுகின்றன என கேள்வி எழுப்பிய வேளையில், விடயத்திற்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் இதனை ஒரு கேலிக்குரிய விடயமாக எடுத்து சிரித்தார். அந்த சிரிப்பிற்கு இன்று பல உயிர்கள் பலி கொடுக்கப்பட்டுள்ளன. இந்த தற்காலிக படகுப் பாதை யாருடைய அனுமதியுடன் இயங்குகின்றது. சட்டமுறைப்படி இயங்குகின்றதா? யார் பொறுப்பு? இதற்கு அரசாங்கம் பதில் கூற வேண்டும் என்றார்.

---

## உள்சார்...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நாம் சட்டத்தை பின்பற்றும் போது, சில சமயங்களில் சட்டங்கள் தாமதமானது. நீதியின் சுமூகமான நிர்வாகத்திற்கு தடையாக இருப்பதைக் காணலாம். நீதி விரைவாக வழங்கப்படுவதைக் காண விரும்புவதால், சட்டத்தைப் பின்பற்றும்போது சட்டங்கள் தாமதங்களை நாம் பொறுத்துக் கொள்ள வேண்டும். அதிர்ஷ்டவசமாக அல்லது துரதிர்ஷ்டவசமாக, நாங்கள் சட்டத்தின் ஆட்சிக்கு கட்டுப்படும் நாட்டில் உள்ளோம் . ஒருவர் குற்றம் செய்தவர் என்று நன்கு அறியப்பட்டிருந்தாலும், அவர் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க சட்டத்தை நடைமுறைப்படுத்த அவருக்கு சுதந்திரம் உள்ளது. எனவே இந்த சம்பவத்தில் அர்ஜுனா மகேந்திரன் தலைமறைவாகியுள்ளார். அவரை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். ஆனால் அவர் அங்கு இல்லாமல் கூட அவர் மீதான வழக்குகள் நிலுவையில் இருப்பதாக நான் நம்புகிறேன். ஏனைய சந்தேக நபர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனவே நியாயம் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் நீங்கள் சொன்னது போல், இந்த முழு நடவடிக்கையின் மூளையாக இருந்தவரை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்று நான் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறேன். உண்மையில் நான் "The Great Bond Scam Cover up" என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதியுள்ளேன். ஏனென்றால், இந்த முழு அத்தியாயத்திலும் ஒரு விரிவான மற்றும் மிக உயர்ந்த அளவில் மூடிமறைப்பு உள்ளது என்று நான் நம்புகிறேன். இந்த கொடூரமான குற்றத்திற்கு முழுமையான நீதி வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக மீண்டும் ஒருமுறை ஆராய்ந்து பார்க்க வேண்டும் மற்றும் சரிபார்க்க வேண்டும்.

**கேள்வி:அர்ஜுனா மகேந்திரனை கைது செய்து இலங்கைக்கு அழைத்து வருவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதா?**

பதில்:சட்ட அமுலாக்க அதிகாரிகள், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸார் ஆகியோர் இதுதொடர்பாக பணியாற்றி வருகின்றனர் என நான் நம்புகிறேன். ஆனால் அவர்கள் இந்த விடயத்தில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து நான் இரகசியத்தை கொண்டிருக்கவில்லை. ஆனால், இந்த நாட்டில் எவரொருவர் தமது செயலால் நாட்டை பெரும் ஆபத்தில் ஆழ்த்தினார்களோ, அவர்களும் தங்கள் தவறுக்கு பொறுப்புக்கூறுமாறு கேட்கப்படுவார்கள் என்பதில் எனக்கும் நம்பிக்கையுள்ளது.

**கேள்வி;2020 முதல் இலங்கையைப் பாதித்த உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிகழ்வுகளை வரிசைப்படுத்தும்போது சுதந்திரத்திற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த மிகவும் துரதிர்ஷ்டவசமான அரசாங்கங்களில் இந்த அரசாங்கம் ஒன்றாகும் என்று தெரிகிறது. ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் மார்ச் அமர்வுகளில் அதிக பெரும்பான்மையுடன் 46/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அரசாங்கம் தமது நிலைப்பாட்டை பின்பற்றாவிட்டால், ஜி.எஸ்.பி. + சலுகையை திரும்பப் பெறுவதாக ஐரோப்பிய ஒன்றியம் அச்சுறுத்தியுள்ளது. அதன் பிறகு கொவிட் 19 தொற்றுநோய் வடிவத்தில் இந்த முன்னொரு போதுமில்லாத மற்றும் மிகவும் தீங்கு விளைவிக்கும் சுகாதார அச்சுறுத்தல் வந்தது. இது முழு நாட்டையும் அனைத்து முனைகளிலிருந்தும் பேரழிவிற்கு உட்படுத்தியது. அந்நிய நேரடி முதலீடு குறைந்துள்ளது. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு வாக்களித்த பெரும்பான்மையான வாக்காளர்கள், மகா சங்கத்தினர், ஏனைய மத குருமார்கள், அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், கல்வியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் உட்பட சமூகம் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை இழந்துள்ளது.இது பொது வோட்டத்திலும் சமூக ஊடகங்களிலும் தெளிவாக வெளிப்படுகிறது. சந்தை, அலுவலகம், பணியிடங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்தில் இருக்கும்போது பொதுமக்கள் தங்கள் வழக்கமான உரையாடல்களில் அரசாங்கத்தை கடுமையாக விமர்சிக்கின்றனர். எப்படி, ஏன்? இந்த ஆரோக்கியமற்ற சூழலை சீர் செய்ய அரசாங்கம் என்ன செய்யப் போகிறது?**

பதில்;ஆம், இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது என்று கூறுவது உண்மைதான். அது உண்மை. அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், அரசாங்கம் இந்தச் சவால்களைக் கையாண்ட விதத்தைப் பார்த்தால், இந்தச் சவால்கள் அனைத்தையும் மீறி, பொருளாதாரத்தையும் நாட்டையும் முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்வதற்காக இந்தச் சவால்கள் அனைத்திற்கும் தெளிவான எதிர்வினை இருந்திருக்கிறது என்று நினைக்கிறேன். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பிரச்சினையை எடுத்துக் கொண்டால், விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட 30 வருட பிரிவினைவாத யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட இராணுவத்தினரையும், எமது மக்களையும் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்ற நிலைப்பாட்டை அரசாங்கம் உறுதியாகக் கடைப்பிடித்துள்ளது. அது நல்ல விடயம்தான். அதேசமயம், ஜி.எஸ். பி. + விலக்கு போன்ற மேலும் புதிய சவால்களை அது ஏற்படுத்தினால், நாங்கள் அதை தெளிவாக்கியுள்ளோம்.நாட்டின் ஒட்டுமொத்த ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையை வேறு தரப்பினரிடமிருந்து சில நன்மைகளைப் பெறுவதற்காக சமரசம் செய்ய முடியாது. அப்படியானால், நாட்டின் இடர் முகாமையாளர் என்ற வகையில், அத்தகைய நடவடிக்கைகளின் தாக்கம் குறைக்கப்படுவதை உறுதிசெய்ய நானே என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன்.

மக்களை எப்படி திருப்திப்படுத்துவது என்பதுதான் இரண்டாம் பாகம். முக்கியமாக தொற்றுநோயின் விளைவாக மக்களுக்கு சவால்கள் உள்ளன. இது இலங்கை மக்கள் மட்டுமல்ல, உலகெங்கிலும் உள்ள மக்களும் அனுபவித்த ஒன்று. மேற்குலக , வளர்ந்த அல்லது செல்வந்த நாடுகள் என்று அழைக்கப்படும் நாடுகளிலும் பாரிய எதிர்வினைகள் மற்றும் கிளர்ச்சிகளை நீங்கள் பார்த்திருக்கலாம். எனவே, நாம் இப்போது கவனம் செலுத்த வேண்டியது என்னவென்றால், அடுத்த இரண்டு ஆண்டுகளில் அந்த ஸ்திரத்தன்மையை எவ்வாறு கொண்டுவர முடியும், புதிய சவால்கள் எதுவுமின்றி மக்கள் தங்கள் அலுவல்களை மேற்கொள்வதை சாத்தியமாக்குகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் அவர்களின் வணிகத்திற்காக 4,000 பில்லியன் ரூபா அளவுக்கு தடை விதித்துள்ளோம். சௌபாக்யா கடன்கள் ரூ. 179 பில்லியன். பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பிரிவினருக்கும் ஏதாவது ஒரு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. சமூகத்தின் நலிந்த பிரிவினரிடையே உள்ள குடும்பங்களுக்கு ரூ.5,000 மூன்று முறை வழங்கப்பட்டது . கொவிட் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டது. தடுப்பூசிக்காக கோடிக்கணக்கான ரூபா செலவிடப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மக்களுக்கு அடிப்படை, அத்தியாவசிய வசதிகளை வழங்குவதற்காக செய்யப்பட்டுள்ளன. சில சமயங்களில், மக்கள் ஏமாற்றம் அடைந்தால் உடனடியாக வருத்தம் அடையலாம். ஆனால் இந்த அரசாங்கம் மற்ற எந்த அரசாங்கமும் செய்ய முடியாத அளவுக்கு சிறப்பாகச் செய்துள்ளது என்பதை மக்கள் புரிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

# அதிக மழையால் பாதிக்கப்பட்ட மரக்கறிச் செய்கைக்காக விசேட உரம், கிருமிநாசினிகளை கொண்டுவரத் தீர்மானம்

## அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே

பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்

இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்காக ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எந்தவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்றும் அதிக மழையால் பாதிக்கப்பட்ட மரக்கறிச் செய்கைக்காக விசேட உரத்தை கொண்டுவரவும் கிருமிநாசினிகளை கொண்டுவருவதற்குமே தீர்மானம் எடுக்கப்பட்டது என்று விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்கு ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியமை தொடர்பில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேள்விகள் எழுப்பிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி, விவசாய அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் உரம் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்களை தெரிவிப்பதாக எதிர்க்கட்சி உறுப்பினர்களான சமிந்த விஜேசிறி மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் கேள்வியெழுப்பினர்.

இதன்போது பதிலளித்த அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே கூறுகையில்,

இரசாயன உரத்தை கொண்டுவருவதற்கு எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை. இரசாயன உர இறக்குமதிக்காக ஜனாதிபதி செயலகத்தினால் எந்தவித உத்தரவும் வெளியிடப்படவில்லை. அவ்வாறு எந்தவித வர்த்தமானியும் வெளியிடப்படவில்லை.



மழையால் பாதிக்கப்பட்ட மரக்கறிச் செய்கைகளுக்காக கிருமிநாசினிகளையும் விசேட உரத்தையும் கொண்டுவருவதற்காக சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்குமாறு விவசாய அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர வேறு எதனையும் கொண்டுவர தீர்மானிக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

# மரக்கறி விற்பனை நிலையங்களுக்கு பூட்டு

நாவலப்பிட்டி நிருபர்

நாவலப்பிட்டி, கம்பளை நகரங்களில் உள்ள மரக்கறி விற்பனை நிலையங்கள் தொடர்ச்சியாக மூடப்பட்டு வருகின்றன.

கடும் மழை, வெள்ளம், வெயில், உரத் தட்டுப்பாடு காரணமாக மரக்கறி விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன. இதனால் பல பகுதிகளிலும் சிறு மரக்கறி விற்பனை நிலையங்கள் மூடப்பட்டு வருகின்றன.

கூடுதலான விலைக்கு மரக்கறிகளை கொள்வனவு செய்து விற்பனை செய்ய முடியாதென வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். உர வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாலும் விவசாய நிலையங்கள் மூடப்பட்டு வருகின்றன.

இதனால் விவசாய நிலங்கள் காடாக மாறி வருகிறது. விவசாயிகள் பயிர்களை பயிரிடுவதை தவிர்த்து வருகின்றனர். குறைந்தளவான மரக்கறி வகைகள் சந்தைக்கு வருவதாகவும், அதையே கூடுதலான விலைக்கு விற்பனை செய்வதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

# நீர்வேலியில் சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் இடம்பெறும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.15 மணிக்கு 'கந்த புராணமும் ஆறுமுகநாவலரும்' என்னும் விடயப்பொருளில் இடம்பெறவுள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிவநெறிச்செம்மல் சைவப்புலவர் செ.த.குமரன் சொற்பொழிவாற்றவுள்ளார்.





கண்டி திரித்துவ கல்லூரி மற்றும் ஹில்வூட் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் கூகண்ணாவ பகுதியில் மண்சரிவில் பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர்கள் 50 பேருக்கும் குறைந்த வருமானம் பெறும் 120 குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் இடம்பெற்றது. இதன்போது கண்டி திரித்துவ கல்லூரி மற்றும் ஹில்வூட் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர்களும் கலந்து கொண்டனர். படம்: பெல்மதுளை நிருபர்

# 15 வயது சிறுமியை கர்ப்பிணியாக்கிய சிறுமியின் சகோதரியின் கணவர் தலைமறைவு

## சிறுமியின் தாயார், சகோதரி கைது

திருக்கோவில் நிருபர்

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் 15 வயது சிறுமி ஒருவரை 7 மாத கர்ப்பிணியாக்கிய சகோதரியின் கணவர் தலைமறைவான நிலையில், சிறுமியின் தாயார் மற்றும் சிறுமியின் சகோதரி உட்பட இருவரை கைது செய்துள்ளதாக திருக்கோவில் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.எஸ்.எஸ். சமந்த தெரிவித்தார்.

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் உள்ள 15 வயது சிறுமி தாய் மற்றும் திருமணம் முடித்த சகோதரியுடன் வாழ்ந்து வந்துள்ளார். இந்த நிலையில், 31 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான சகோதரியின் கணவன் குறித்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்து 7 மாத கர்ப்பிணியாக்கியுள்ளார்.

இதனையடுத்து இது தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் சிறுவர் பிரிவு பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வந்த நிலையில், சிறுமியை கர்ப்பமாக்கிய சிறுமியின் சகோதரியின் கணவர் தலைமறைவாகியதையடுத்து சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்தனர். இதனையடுத்து தலைமறைவாகியவரை பொலிஸார் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதுடன், குறித்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ள உடந்தையாக இருந்த சிறுமியின் 54 வயதுடைய தாயார் மற்றும் சிறுமியின் 24 வயது சகோதரி ஆகிய இருவரையும் திங்கட்கிழமை பொலிஸார் கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

# பாடசாலைகளில் பின்பற்ற வேண்டிய சுகாதார வழிகாட்டல் வெளியிடப்பட்டது

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் 6, 7, 8 மற்றும் 9 ஆம் தரங்களுக்கான கல்வி நடவடிக்கைகள் திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், நோய் அறிகுறிகள் காணப்படுமாயின் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இது தவிர, மாணவர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானதாக சந்தேகித்தாலோ அல்லது தொற்று உறுதி செய்யப்பட்டாலோ பாடசாலைகளில் பின்பற்ற வேண்டிய முறைமைகள் அடங்கிய சுகாதார வழிகாட்டல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, அவ்வாறு மாணவர் ஒருவர் அடையாளம் காணப்பட்டால், அவரைத் தனிமைப்படுத்துவதற்கான தனி இடமொன்று பாடசாலைகளில் இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், பாடசாலைகளின் நுழைவாயிலில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உடல்நலம் குறித்து கண்காணிப்பது அத்தியாவசியமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# வவுணதீவில் 50 போத்தல் மதுபானத்துடன் ஒருவர் கைது

## சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டவரும் சிக்கினார்



திருக்கோவில் நிருபர்

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தில் 50 கால் போத்தல் மதுபானங்களுடனும் அனுமதிப்பத்திரத்தை மீறி உழவு இயந்திரத்தில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவர் உட்பட இருவரை நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலையில் கைது செய்துள்ளதாக வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிசாந்த அப்புகாமி தெரிவித்தார்.

விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினமான நேற்று அதிகாலை மட்டக்களப்பு நகரில் இருந்து வவுணதீவு பிரதேசத்திற்கு மோட்டார் சைக்கிள் ஒன்றில் 50 கால் போத்தல் மதுபானங்களை வியாபாரத்துக்காக எடுத்துச் சென்ற வியாபாரி ஒருவரை வவுணதீவு வலையிறவு பாலத்தில் வைத்து கைது செய்ததுடன் மதுபானங்கள், மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றினர். இதேவேளை வாழைக்காடு பிரதேச ஆற்றில் அனுமதிப்பத்திரத்தை மீறி உழவு இயந்திரத்தில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவரை கைது செய்ததுடன் ,உழவு இயந்திரம் ஒன்றையும் கைப்பற்றினர்.

# திருமலை சிறு வியாபார தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினரின் சேதன விவசாய உற்பத்திப்பொருட் சந்தை

மூள்ளிப்பொத்தானை நிருபர்

திருகோணமலை மாவட்ட சிறு வியாபார தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட சேதன விவசாய உற்பத்திப் பொருட் சந்தை திங்கட்கிழமை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராளவினால் திறந்து வைக்கப்பட்டது.

மாவட்டத்தைச் சேர்ந்த தொழில் முயற்சியாளர்கள் முற்றுமுழுதாக சேதனப் பசளையை பயன்படுத்தி உற்பத்தி செய்த உற்பத்திப் பொருட்கள் இங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன.

குறித்த தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



சேதன விவசாய உற்பத்தி தொடர்பில் பயிற்சிகளினை நிறைவு செய்த தொழில் முயற்சியாளர்களுக்கு அரசாங்க அதிபரினால் உரிய சான்றிதழ் இதன்போது வழங்கப்பட்டது. peace winds Japan நிறுவனம் இதற்கான ஒத்துழைப்பை வழங்கியது.

சேதனப் பசளை மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் தரமானதாகவும் மனித ஆரோக்கியத்திற்கு மிகவும் உகந்ததாகும். இதில் ஈடுபடுகின்ற உற்பத்தியாளர்களுக்கு கூடிய வருமானம் கிடைக்கக் கூடியதாக இருப்பதுடன், நுகர்வோரும் ஆரோக்கியமான உணவை உட்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் இதன்மூலம் ஏற்படுவதாக இதன்போது அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மத்திய வங்கியின் பிரதேச முகாமையாளர், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.பிரணாதவன், உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# இரத்மலானை இந்துவில் மாணவர்கள் உள்ளீர்ப்பு

க.பொ.த. (சா/த) 2020க்கான பெறுபேறுகள் வெளிவிடப்பட்டதன் பின்னர் அப்பரீட்சையில் உயர்தரம் கற்பதற்கு தகுதியடையாத மாணவர்கள் தங்களது தொழிற்பிரிவிற்கான அனுமதியினை கொழும்பு இந்துக் கல்லூரி , இரத்மலானையில் இணைந்து NVQ Level 4 இதனைப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கான அனுமதி,நாளைய தினத்தில் இருந்து (25.11.2021) வழங்கப்படவுள்ளதுடன், அனுமதியினைப் பெற விரும்பும் மாணவர்கள் உடனடியாக பாடசாலைக்கு சமூகம் தருவதனூடாக பெற்றுக்கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். தொடர்புகளுக்கு 076-5236946 என்ற இலக்கத்தினூடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# ஜே .வி. பி.யினரிடம் நூலகம் அன்பளிப்பு

கற்பிட்டி நிருபர்

விலைமதிக்க முடியாத நூலகம் மக்கள் விடுதலை முன்னணியிடம் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சியின் புத்தளம் மாவட்ட செயற்பாட்டாளர் ஹிஸாம் ஹுஸைன் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவிடம் குறித்த நூலகத்தை அவர் கையளித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையின் சிரேஷ்ட இலக்கியவாதி டெனிசன் பெரேரா, சுமார் 60 வருடங்களுக்கும் மேலாக இலங்கையின் சிறுகதை, நாவல், மொழியாக்கம், விமர்சனத் துறைக்கு பெரும் பங்காற்றியவர். 'இலங்கை எழுத்தாளர் அமைப்பில்' நீண்டகாலம் தலைவராகப் பணியாற்றியவர்.

அவர் தனது வாழ்நாள் முழுதும் சேகரித்த விலைமதிக்க முடியாத நூல்கள் அடங்கிய நூலகத்தை மக்கள் விடுதலை முன்னணிக்கு அன்பளிப்பு செய்துள்ளார். சிறந்த தொரு சமுதாயத்தை உருவாக்குவதற்காக வருங்கால சந்ததியினர் பயன்படுத்துவதற்கு தனது நூலகத்தை மக்கள் விடுதலை முன்னணியிடம் அவர் அன்பளிப்பு செய்துள்ளார் என்றார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் மருதமுனைக்கு வருகை தந்து கட்சியின் மத்திய குழு ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட மக்களையும் காணலாம்.
படங்கள்: மருதமுனை நிருபர்





# பட்ஜெட்டுக்கு ஆதரவளித்த மக்கள் காங்கிரஸ் கட்சி எம்.பி.க்கள் கட்சி உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தம்

## ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் தீர்மானம்

கட்சியின் தீர்மானத்திற்கெதிராக, வரவு–செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டம் மீதான முதலாவது வாக்கெடுப்பிலும் இறுதி வாக்கெடுப்பிலும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கட்சியின் தலைவர் ரிஷாட் பதியுதீன், இஷ்ஹாக் றஹ்மான், அலி சப்றி றஹீம் மற்றும் முஷாரப் முதுநபீன் ஆகிய நால்வரும் வரவு–செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அரசியல் அதிகார சபைக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

குறித்த தீர்மானம் பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வருக்கும் மின்னஞ்சல், குறுஞ்செய்தி, வட்ஸ்அப், கடிதம் மூலமாகவும் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், கட்சியின் தலைவர் தவிர்ந்த ஏனைய மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சியின் தீர்மானத்திற்கெதிராக, திங்கட்கிழமை வரவு–செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். இது தொடர்பில் கட்சியின் அரசியல் அதிகார சபைக் கூட்டம் கூடி ஆராயப்பட்டது.

இதன்போது, கட்சியின் யாப்பில் அரசியல் அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் அடிப்படையில், கட்சியின் தீர்மானத்திற்கு எதிராக, வரவு–செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த பாராளுமன்ற உறுப்பினர்களான இஷ்ஹாக் றஹ்மான், அலி சப்ரி ரஹீம், முஷாரப் முதுநபீன் ஆகியோரை கட்சியின் உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்துவதெனவும் அவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களான இஷ்ஹாக் றஹ்மான், அலி சப்ரி ரஹீம், முஷாரப் முதுநபீன் ஆகியோர் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் , அவர்களுக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கை கட்சியினால் மேற்கொள்ளப்படும் என செயலாளர் நாயகம் எஸ்.சுபைர்தீன் தெரிவித்தார்.

# இதுபோன்ற சம்பவங்களுக்கு இனியும் இடமளிக்கக்கூடாது

## மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் துரைநாயகம்

முள்ளிப்பொத்தானை நிருபர்



கிண்ணியா குறிஞ்சாக்கேணி இழுவைப்படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்குதனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறுவதற்கு இனியும் இடமளிக்கக் கூடாது எனவும் மூதூர் பிரதேச சபை உப தவிசாளர் சி.துரைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிண்ணியா குறிஞ்சாக்கேணியில் நேற்று இடம்பெற்ற இழுவைப்படகு விபத்தில் பல மாணவர்கள் உட்பட பெற்றோரும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது,

கிண்ணியாவில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இழுவைப்படகு விபத்தில் பல கனவுகளுடன் பாடசாலைக்குச் சென்ற பல சிறார்கள் பரிதாபகரமாககாவு கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். இது மிகுந்த மன வேதனையைத் தருகின்றது. இந்த இழப்பு ஈடுசெய்யப்பட முடியாதது. எனினும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அரசாங்கம் இவர்களுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

இன்னமும் இதுபோன்று பல பகுதிகளில் பாதுகாப்பற்ற இழுவைப்படகு மூலம் பயணம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதைப் பயன்படுத்தி பயணத்தை மேற்கொள்பவர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் இவர்களின் போக்குவரத்துக்கு நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுக்கும் முகமாக பாலங்களை அமைக்கும் நடவடிக்கையையும் அரசு முன்னெடுக்க வேண்டும் எனவும் இதுபோன்ற சம்பவங்கள் இனியும் இடம்பெறக்கூடாது என்பதில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மாவீரர் நாள் தடை உத்தரவு கட்டளையை மீளப் பெறக்கோரி நீதிமன்றில் மனுத்தாக்கல்

## வழக்கு இன்று புதன்கிழமை வரை ஒத்திவைப்பு

நெளுக்குளம், வவுனியா நிருபர்கள்

மாவீரர் நாள் தடை உத்தரவுக் கட்டளையை மீளப் பெறுமாறு கோரி வவுனியா நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்த நிலையில், மன்றினால் இன்று புதன்கிழமை வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக முன்னாள் அரசியல் கைதி செல்வநாயகம் அரவிந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறந்தவர்களை நினைவுகூர எனக்கு வழங்கப்பட்ட தடை உத்தரவு கட்டளையை மன்று மீளப்பெறவேண்டும் எனக் கோரி சட்டத்தரணி யூஜின் ஆனந்தராஜ் தலைமையில் வவுனியா நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தேன். வவுனியா மன்றில் இருந்த பல சட்டத்தரணிகளும் தாமாக முன்வந்து குறித்த வழக்கில் ஆஜராகியிருந்தார்கள்.

தடை உத்தரவில் குறிப்பிடப்பட்டதன் அடிப்படையில் 106 இன் (1), (3), (6) பிரிவின் படி ஆர்ப்பாட்டத்தையும் மாவீரர் தினத்தையும் நடத்துவதை நிறுத்துவதற்கான கட்டளை எனக்கு வழங்கப்பட்டிருந்தது. வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் அறிக்கைக்கு அமைய விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட அமைப்பு என்றும் இலங்கை அரசினால் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானியில் தடை செய்யப்பட்டது. அந்த அமைப்புக்கு உடந்தையளித்தல், அதனை பிரபல்யப்படுத்துதல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன.

அந்த இயக்கத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் நினைவாக 21.11 - 27.11 வரை உறுப்பினர்களை இணைத்து மாவீரர் நாள் செய்யவுள்ளதாகவும் இது விரோதமான செயற்பாடு எனவும் சுட்டிக்காட்டி பல்வேறு காரணங்களின் அடிப்படையில் மன்றிடம் இருந்து பொலிஸாரினால் தடை உத்தரவு பெறப்பட்டிருந்தது.

இந்தக் கட்டளையின் படி நான் குறித்த விடயத்தை கவனத்தில் கொண்டு எமது குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் இணைந்து இறந்த உறவுகளுக்கு நினைவு செலுத்த உரிமை இருக்கிறது. அது அடிப்படையான உரிமை என எனது சார்பில் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியிருந்தார்கள். தமிழ் மொழியை கையாண்டு இந்த வழக்கை நடத்த தற்போது ஆளணி இல்லை எனவும் மாவீரர் தினத்திற்குப் பின் வழக்கை நடத்த பொலிஸார் அனுமதி கோரினர். எமது சட்டத்தரணிகள் அதனை கடுமையாக எதிர்த்தனர். மாவீரர் தினம் முடிந்த பின் தமது கட்சிக்காரருக்கு அவர் கோரும் நிவாரணம் கிடைக்காமல் போய்விடும். எனவே இன்றைய தினமே கட்டளை வழங்குமாறு மன்றிடம் கோரினர். இந்த நிகழ்வு தொடர்பில் கிடைத்த ஆதாரங்களை பொலிஸார் சாட்சிப்படுத்துவதற்காக இன்று புதன்கிழமை வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன், இன்று மன்று கட்டளை வழங்கும் என எதிர்பார்க்கின்றேன் என்றார்.

# பாடகி யொஹானிக்கான பாராட்டு நிகழ்வு ஒத்திவைப்பு

புதியதலைமுறைப்பாடகி யொஹானி டி சில்வாவை பாராளுமன்றத்தில் பாராட்டும் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டது.

பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் நேற்று செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்திருந்த, புதிய தலைமுறைப் பாடகி யொஹானி டி சில்வாவை பாராளுமன்றத்தில் பாராட்டும் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

# கிண்ணியாவில் உயிரிழந்தோருக்கு செந்தில் தொண்டமான் இரங்கல்



திருகோணமலையில் இழுவைப்படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் மாணவர்கள் உள்ளிட்ட பலர் உயிரிழந்துள்ள சம்பவம் பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது எனவும் இறந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதாக இ.தொ.கா.வின் உப தலைவரும்,பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்கள் விரைவில் குணமடைய இறைவனை பிரார்த்திக்கிறேன்.

உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் காணாமல் போனவர்களை மீட்கும் பணி தொடர்பாகவும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களின் நிலைமை குறித்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு விசாரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை மக்கள் வங்கியில் பணம் வைப்பிலிடும் இயந்திரம் திறப்பு





கல்முனை நிருபர்

கல்முனை மக்கள் வங்கியில் பணம் வைப்பிலிடும் இயந்திரம் (CDM) திறப்பு விழா நேற்று இடம்பெற்றது.

இதன்போது மக்கள் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் ஜே.யூ.ஏ.அன்சார் மற்றும் கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் லியாகத் அலி ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டி திறந்துவைத்தனர்.

கல்முனை மக்கள் வங்கியின் முகாமையாளர் ஏ.எல்.அப்துல் சலாம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை பிராந்திய முகாமையாளர் எச்.ம.குணரத்தின உட்பட வங்கி உயரதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது அதிதிகள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் நாடாவை வெட்டி பணம் வைப்பிலிடும் இயந்திரத்தை (CDM) திறந்து வைப்பதையும் காணலாம்.

# கிண்ணியாவில் இந்தோனேஷிய தூதரக ஏற்பாட்டில் கலாசார பரிமாற்ற நிகழ்வு

மூதூர் நிருபர்

இந்தோனேஷிய தூதரகத்தின் ஏற்பாட்டில் கலாசார பரிமாற்ற நிகழ்வு கிண்ணியாவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இந்தோனேஷிய நாட்டின் பிரதித் தூதுவரும் கலாசார நிகழ்வின் பிரதம உத்தியோகத்தருமான ஹிரோ பிரே இட் நோ பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்தோனேஷியாவின் புகழ் பெற்ற நடனம் மற்றும் பாரம்பரிய இசைக் கருவியான மூங்கிலால் ஆன இசைக்கருவியை இசைத்தல் போன்ற நிகழ்வுடன் இலங்கை திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் பாரம்பரிய இசைக் கருவிகளைக் கொண்டு பாடல்கள் மற்றும் தகரா பாவா பாடல்கள், சீனடி விளையாட்டு என்பனவற்றை இரு நாடுகளுக்கான கலாசார நிகழ்வாக பகிர்ந்து கொண்டன.


ஜோர்தான் நாட்டுக்கான முன்னாள் தூதுவர் ஏ .எல் .எம் .லாபிர் தலைமையில் கிண்ணியா விஷன் கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் யுனெஸ்கோ நிறுவனத்தினால் இந் நாட்டிற்கான பாரம்பரிய இசை என்ற அங்கீகாரத்தை பெற்ற மூங்கிலால் ஆன இசைக்கருவியை இசைத்துக் காட்டினர். மேலும் இந்தோனேஷிய நாட்டின் பிரபல நடனங்களும் ஆடிக் காட்டப்பட்டன.

இந்நிகழ்வில் பேராசிரியர்கள், புத்திஜீவிகள், கலை இலக்கியவாதிகள் மற்றும் வைத்திய நிபுணர்கள் உட்பட பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

# அம்பாறையில் கஜ முத்துக்களை விற்பதற்கு முயன்ற மூவர் கைது



அம்பாறை மாவட்டத்தில் வரிப்பத்தான்சேனை பகுதியில் சட்டவிரோதமான முறையில் 10 கஜ முத்துக்களை விற்பனை செய்ய எடுத்துச்சென்ற மூவர் பெரியநீலாவணை விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பெரியநீலாவணை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, அம்பாறை மாவட்டத்தில் வரிப்பத்தான்சேனை அஷ்ரப் ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தை அண்டிய பகுதியில் வைத்து குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கஜ முத்துக்களை 10 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்ய சந்தேக நபர்கள் முயன்றுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக் கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜே.ஆர். சேனாதீரவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட கட்டளை அதிகாரி டி.சி வேவிட விதான வழிகாட்டலில் பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.சி.டி.ஏ. ரத்நாயக்க, எஸ்.எம்.பி.பி.எம். டயஸ் தலைமையிலான விசேட அதிரடிப்படையினர் இந்த சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர் .

இதன்போது 45 மற்றும் 50 வயது மதிக்கத்தக்க மல்வத்தை பகுதியைச் சேர்ந்த இருவரும் வரிப்பத்தான்சேனை பகுதியைச் சேர்ந்த மற்றொருவருமாக மூவர் கைது செய்யப்பட்டனர்.

மோட்டார் சைக்கிள் விற்பனைச் சந்தை
அநுராதபுரம்

| வாகன இல. | தயாரிப்பு | வகை |
|---|---|---|
| NW BHA 49XX | HONDA | DIO |
| NC BGL 70XX | SUZUKI | Gixxer 155cc |
| NW BIR 22XX | HONDA | CB 160 X |
| NC BIM 64XX | HONDA | DIO |
| NC BFJ 22XX | DEMARK | Sky Line |
| NW BIA 70XX | HONDA | Hornet |
| NC BFO 59XX | SUZUKI | Gixxer 155cc |
| NW BIL-93XX | BAJAJ | CT 100 |
| NW BIA-45XX | HONDA | NAVI |
| NW BHR-86XX | HONDA | Grazia 125cc |
| NW BIA-99XX | HONDA | NAVI |
| NW BHP-94XX | HONDA | DIO |
| CP BIC-28XX | HONDA | NAVI |
| NW BIO-78XX | YAMAHA | RAY-ZR |
| NW BIN-38XX | YAMAHA | RAY-ZR |
| NW BIB-20XX | HONDA | NAVI |
| NC BFK-84XX | DEMARK | DZM 200 |
| NC BIP-55XX | HONDA | GRAZIA 125cc |
| NC BHC-14XX | TVS | XL Super HD 70cc |
| NC BFJ-43XX | DEMARK | DTM 150 |
| NC BCD 35XX | HONDA | Dream Yuga |
| CP-BIA-70XX | HONDA | NAVI |
| CP-BIG-04XX | HONDA | HORNET |
| EP-BGM-88XX | RANOMOTO | Pattaya 125 |
| NW-BIA-13XX | HONDA | CD Dream |
| NC-BHF-36XX | HONDA | DIO |
| NC-BGY-05XX | HONDA | DIO |
| NW-BIO-07XX | BAJAJ | CT 100 |
| NC-BHA-93XX | BAJAJ | Pulsar 200 |
| CP-BIB-47XX | HONDA | NAVI |
| CP-BIA-90XX | YAMAHA | RAY ZR |

யாழ்ப்பாண ஜங்ஷன், அநுராதபுரம்
(யுனைட்டட் மோட்டர்சுக்கு முன்)
வாகன சந்தையில் 2021 நவம்பர் 25ம் திகதியில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை பார்வையிடலாம்.
0712 125 664 / 0718 286 354
நுழைவு கட்டணம் ரூ. 1500/-
ஏலத் திகதி : 26.11.2021
நேரம்: காலை 10.00 மணி
Associated Motor Finance Company PLC
தொலைபேசி: 0115 553663

# குறிஞ்சாக்கேணி பாலத்தை நிர்மாணித்திருந்தால் மாணவர்களின் மரணங்களை தவிர்த்திருக்கலாம்

## முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா

கிண்ணியா குறிஞ்சாக்கேணிபாலத்தை நிர்மாணிக்க அப்பகுதித் அரசியல்தலைவர்கள்உடனடியாக நடவடிக்கைமேற்கொள்ளவேண்டுமென கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இன்று ( நேற்று )காலை கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதியில் உள்ள ஆற்றில் 20 மாணவர்களுடன் பயணித்த படகு கவிழ்ந்ததில் 6 மாணவர்கள், மரணமடைந்தனர். இச்சம்பவம் கேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றேன். இது ஒரு மிகப் பரிதாமான சம்பவம். இந்தப்பாலம் அமைக்க பலராலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அமைக்கப்படாதது துரதிஷ்டவசமாகும். அது அமைக்கப்பட்டிருந்தால் இம் மரணங்களைத் தடுத்திருக்க முடியும். இப் பாலமானது நிர்மாணிக்க அப்பகுதித் அரசியல் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வது மிகவும் அத்தியாவசியமாகும்.



கிண்ணியா படகு விபத்தில் பலர் உயிரிழந்த சம்பவத்தால் ஆத்திரமடைந்த மக்கள், கிண்ணியாவில் உள்ள திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் இல்லத்தின் மீது தாக்குதல் நடத்தியதில் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளதை காணலாம்.

படம்: மூதூர், சீனக்குடா நிருபர்



கொட்டாஞ்சேனை ஸ்ரீ சத்ய சாய்பாபா மத்திய நிலையத்தின் தலைவர் எஸ்.என். உதயநாயகன் தலைமையில் நடைபெற்ற பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் பிறந்த நாள் நிகழ்வில் பாபாவின் இறைகீதங்கள் இசைக்கப்பட்டு ஆரத்தி எடுப்பதையும் ,பிறந்த நாள் கேக் வெட்டுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம்.

# ஜனாதிபதியைச் சந்தித்த ரஷ்ய பாதுகாப்புச் சபை செயலாளர்

## அடிப்படைவாத செயற்பாடுகளை தடுப்பதற்கு ஒத்துழைப்பு



ரஷ்யாவின் பாதுகாப்புச் சபை செயலாளர் நிக்கொலாய் பட்ருஷெவ் , ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ , ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் சந்தித்தார்.

சோவியத் சோசலிச குடியரசின் அரச புலனாய்வுச் சேவை (KGB) மற்றும் ரஷ்ய ஃபெடரல் பாதுகாப்புச் சேவை ஆகியவற்றில் நீண்டகால அனுபவத்தைக் கொண்டுள்ள நிக்கொலாய் பட்ருஷெவ் , 2008ஆம் ஆண்டு முதல், ரஷ்யாவின் பாதுகாப்புச் சபை செயலாளராகப் பணியாற்றி வருகின்றார்.

இலங்கை மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான இருதரப்புத் தொடர்புகள், 2022 பெப்ரவரி 19ஆம் திகதியுடன் 65 ஆண்டுகள் பூர்த்தியை அடைகின்றன. நிக்கொலாயின் இந்த விஜயத்தின் மூலம், இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகள் மேலும் பலப்படுத்தப்படுவதாக, ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

நிக்கொலாய் பட்ருஷெவ் கொண்டுவந்த கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான ஸ்பூட்னிக் தடுப்பூசிகள் 5,000 மற்றும் கொவிட் தடுப்பூசியேற்றலை வெற்றிகொள்ள ரஷ்யா வழங்கிய ஒத்துழைப்பு, கொவிட் பரவலுக்கு மத்தியிலும் ரஷ்யப் பிரஜைகள் 49,379 பேர் கடந்த ஆண்டு இலங்கைக்கு சுற்றுலா வந்தமை போன்றவற்றுக்கு, ஜனாதிபதி அவர்கள் நன்றியைத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர் என்ற வகையில், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் சமாதானம் மற்றும் பாதுகாப்புக்காக முன்னிலையாவது தொடர்பில் , ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரின் போது இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்தார்.

இலங்கையின் பயங்கரவாத ஒழிப்புப் போரின் போது, ரஷ்யா பாரிய ஒத்துழைப்புகளை நல்கியுள்ளது. புலனாய்வுத் தகவல் பரிமாற்றங்கள், பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான பணப் பயன்பாட்டைத் தடுத்து நிறுத்தல் உள்ளிட்ட அடிப்படைவாத, பயங்கரவாத மற்றும் சைபர் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கான இரு நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்புகளை மேலும் பலப்படுத்த இலங்கை தயாராக உள்ளதென்று, நிக்கொலாய் பட்ருஷெவிடம் ஜனாதிபதி தெரிவித்தார்.

# ஐ.ம.ச.வின் 21 உள்ளூராட்சி சபை பிரதிநிதிகள் மீண்டும் ஐ.தே.க.வில்

க.பிரசன்னா

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி, ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்த ஹம்பாந்தோட்டை மாவட்டத்தைச்சேர்ந்த 21 உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் மீண்டும் கட்சியில் இணைவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த மக்கள் பிரதிநிதிகளில் ஒன்பது பேர் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான வஜிர அபேவர்தனவுடன் கடந்த 21ஆம் திகதி மாலை அம்பலாந்தோட்டை நோனாகமவில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டவர்களில் தங்காலை மாநகர சபை உறுப்பினர் மொஹமட் சிராஸ், ஹம்பாந்தோட்டை மாநகர சபை உறுப்பினர்களான தினேஷ் தர்ஷன, எம். மொஹமட் ரிஸான், ஷரீப்தீன் பாரிஸ், எஸ்.அருண சாந்த, மொஹமட் சம்சுதீன், திஸ்ஸமஹாராம பிரதேச சபை உறுப்பினர் ஏ.பி. தம்மிக்க, தங்காலை பிரதேச சபை உறுப்பினர் சமன் குமார, அம்பலாந்தோட்டை பிரதேச சபை உறுப்பினர் அஹமட் ஷகூர் ஆகியோர் உள்ளடங்குவர்.

ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகித்த நிலையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்தமைக்காக இவ் உறுப்பினர்களுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் ஒழுக்காற்றுக் குழு அண்மையில் ஒழுக்காற்று விசாரணைகளை நடத்தியிருந்தது.

இதன்படி, ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்த கால, நிகழ்கால மற்றும் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் எதிர்நோக்கும் சவால்கள், அவற்றை முறியடிக்கும் வகையில் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தொலைநோக்கு வேலைத்திட்டம் குறித்து வஜிர அபேவர்தன விரிவாக எடுத்துரைத்தார். இந்நிலையில் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அமைக்கும் வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தீவிரமாக ஆதரவளிக்க உடன்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் ஹம்பாந்தோட்டை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஆனந்த குலரத்ன, முன்னாள் பாராளுமன்ற பிரதி சபாநாயகர் சிறி அந்தோஹன்னதி, தென் மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர், ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் அசோக தனவன்ச, ஹம்பாந்தோட்டை தேர்தல் அமைப்பாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# நினைவேந்தல் தடை கோரும் மனு ஊர்காவற்றுறை நீதிமன்றும் நிராகரிப்பு

மாவீரர் நாளுக்குத் தடை கோரிய விண்ணப்பத்தை ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 5 பேரின் பெயர் குறிப்பிட்டும் நெடுந்தீவு பொலிஸ் பிரிவில் ஒருவரின் பெயர் குறிப்பிட்டும் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த தடை கோரி பொலிஸார் மன்றில் விண்ணப்பம் செய்தனர்.

நேற்று இந்த விண்ணப்பம் மீதான விசாரணையின் போது பிரதிவாதிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஸ்ரீகாந்தா, கனகரட்ணம் சுகாஸ் உள்ளிட்ட சிலர் ஆஜராகி தடை உத்தரவை பிறப்பிக்க கூடாதென வாதம் செய்தனர்.

இதனை விசாரித்த ஊர்காவற்றுறை நீதவான் அந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

# கொழும்பு நகருக்கான தங்க நுழைவாயில்!

இலங்கையில் முதற்தடவையாக உயர் தொழில்நுட்ப கேபிள்கள் மேல் அமைக்கப்பட்ட கோல்டன் கேட் கல்யாணி என அழைக்கப்படும் புதிய களனி பாலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோரால் இன்று திறந்து வைக்கப்படவுள்ளதாக பெருந்தெருக்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பு கட்டுநாயக்க அதிவேக பாதை திறக்கப்பட்ட பின்னர் கொழும்பு நகரம் மற்றும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் என்பன ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டதால் கொழும்பு நகருக்குள் நுழையும் வாகனங்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காக 2012ஆம் ஆண்டு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டு 2013ஆம் ஆண்டு சாத்தியவள ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டு 2014 ஆம் ஆண்டு இலங்கையில் முதற்தடவையாக அதி தொழில்நுட்ப கேபிள்களை பாவித்து புதிய களனி பாலம் அமைக்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. களனி கங்கைக்கு குறுக்காக



அமைக்கப்பட்டுள்ள இந்த பாலத்தின் நீளம் 380 மீட்டர் ஆகும். இப்பாலம் இரண்டு தொகுதியின் கீழ் அமைக்கப்பட்டது. முதலாவது தொகுதியில் உருக்கினால் ஆன பாலத்தின் பகுதிக்கு 31,539 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன் இரண்டாவது தொகுதியில் கொன்கிரீட் தொங்கு பாலம் பகுதிக்கு 9,886 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் நிதி பங்களிப்புடன் இப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

மக்கள்செறிந்து வாழும் பிரதேசத்தின் ஊடாக அமைக்கப்படும் புதிய களனி பால திட்டத்தில் களனி தில்ல சுற்றுவட்ட பாதையை அண்டிய பிரதேசம் மற்றும் புதிய களனி பாலம் முடிவிலிருந்து ஒருகொடவத்தை சந்தி வரையான பாதையின் இரு மருங்கையும் அலங்கரிக்க தேசிய தாவரவியல் பூங்கா அதிகாரிகளால் பரிந்துரைக்கப்பட்ட ஆல், அலரி, தேக்கு, இலுப்பை போன்ற பலவகையான மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாக பெருந்தெருக்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

# சாவகச்சேரி வாள் வெட்டில் ஒருவர் படுகாயம்

சாவகச்சேரி கச்சாய் வீதிப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

கச்சாய் வீதி சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 38வயதான சி.சிவபாலன் என்பவரே வாள் வெட்டுக்கு இலக்கானவராவார்.

இவரது கை விரல் துண்டாடப்பட்டதுடன், தோள் மூட்டு , வயிறு,கை பகுதிகளிலும் வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

வாள்வெட்டுச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# தமிழகத்தில் வலுவடையும் தாழமுக்கம் மூன்று தினங்களுக்கு கனமழை

தென்மேற்கு வங்கக்கடலில் இன்று காலை(24) குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகுவதற்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளியாகியுள்ள அறிவிப்பில்,

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை அதி கனமழைக்கு வாய்ப்புள்ளது.

குறிப்பாக டெல்டா மாவட்டங்கள், தென் மாவட்டங்கள் மற்றும் கடலோர மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் எனவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தாழமுக்கமானது, மேற்கு வடமேற்கு திசையில் இலங்கை மற்றும் தென் தமிழகத்தை நோக்கி நகரக்கூடுமெனவும் இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, இலங்கை மற்றும் தெற்கு தமிழ்நாடு கடல் பகுதிகள் இடையே வரக்கூடுமெனவும் ஒரே மாதத்தில் 3 ஆவது முறையாக வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கால்வாயில் குளித்த தலித் மாணவர்கள் மீது கொடூரத் தாக்குதல்

## பொது அமைப்புகள் கண்டனம்

பெருந்துறை அருகே கால்வாயில் குளித்த தலித் மாணவர்கள் மீது மற்றொரு சமூகத்தினர் கொடூரமாக தாக்குதல் நடத்தியுள்ளனர். மேலும் மாணவர்களை அரை நிர்வாணமாக்கி உதைத்த அட்டூழியமும் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஈரோடு மாவட்ட தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் மாவட்ட செயலாளர் தெரிவிக்கும் போது,

தமிழகத்தின் ஈரோடு மாவட்டம், பெருந்துறை தாலுகா காஞ்சிக்கோயில் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், வழக்கமாக வாய்க்காலில் தலித் மாணவர்கள் நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது உங்களுக்கு எல்லாம் இங்கே என்ன குளியலெனக் கேட்டு, அங்கு வந்தவர்களினால் தாக்கப்பட்டனர். மேலும்,



அந்த மாணவர்களை அரை நிர்வாணமாக நிற்க வைத்து, கட்டி வைத்திருந்த கயிற்றை எடுத்து பலமாக அடித்து, ஒரு மணிநேரம் பொதுவெளியில் நிற்க வைத்து, அவமானப்படுத்தி சித்திரவதை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் பெருந்துறை அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதனிடையே ஜாதிய ரீதியாக மாணவர்களை இழிவுபடுத்தி தாக்கிய நபரை கைது செய்ய வேண்டுமென தீண்டாமை ஒழிப்பு முன்னணி உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளருக்கும் புகார் மனுவை கையளித்துள்ளனர். தலித் மாணவர்கள் மீதான இத்தகைய கொடூரத் தாக்குதல், பெருந்துறைப் பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

# எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்த நான்கு வயதுச் சிறுவன்

உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தின் அடித்தள முகாமைச் சென்றடைந்த மிகவும் குறைந்த வயதுடைய ஆசியர் என்ற பெருமையை 4 வயதேயான இந்தியச் சிறுவன் பெற்றுள்ளான்.

மேற்காசிய நாடான ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அபுதாபியில், வாழும் ஸ்வேதா கோலேச்சா - கவுரவ் கோலேச்சா என்ற இந்திய வம்சாவளித் தம்பதியினருக்கு அத்வித் என்ற 4 வயது மகன் உள்ளார்.

மலையேறும் பயிற்சிகளை அத்வித்துக்கு அளிக்க முடிவு செய்த ஸ்வேதா, அவர் நடக்க ஆரம்பித்த நாள் முதல், அதற்கான பயிற்சிகளை வழங்கி வந்தார். அபுதாபியில் 15 ஆவது மாடியிலுள்ள தங்கள் வீட்டிற்கு செல்வதற்கு படியில் ஏற வைத்து,



பயிற்சிகளை ஆரம்பித்துள்ளார். இவ்வாறு தொடர் பயிற்சிகளை மேற்கொண்டு வந்த அத்வித், தற்போது உலகின் மிக உயரமான எவரெஸ்ட் மலையின் அடித்தள முகாமைச் சென்றடைந்து, சாதனை படைத்துள்ளார்.

தன் தாய் ஸ்வேதா மற்றும் மாமா சவுரப் சுக்கானியுடன், கடந்த அக்டோபர் 28 ஆம் திகதி மலையேறுவதற்கு ஆரம்பித்த அத்வித், கடந்த 6 ஆம் திகதி 5,364 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள அடித்தள முகாமைச் சென்றடைந்தார். இதன் வாயிலாக, ஆசியாவிலிருந்து, எவரெஸ்ட் சிகரத்தின் அடித்தள முகாமைச் சென்றடைந்த, மிகவும் குறைந்த வயதான நபரெனும் பெருமையைப் பெற்றுள்ளார்.

# சர்வோதய அபிவிருத்தி நிதி நிறுவனம் மெய்நிகர் முதலீட்டாளர் அமர்வை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது




இலங்கையின் மிகப்பழமையான சமூக இயக்கங்களில் ஒன்றான சர்வோதய ஷ்ரமதான இயக்கத்தின் நிதிச்சேவைப் பிரிவான சர்வோதய அபிவிருத்தி நிதி நிறுவனம், தனது முதலீட்டாளர் அமர்வை சமீபத்தில் ஏற்பாடு செய்திருந்தது. நவம்பர் 23 ஆம் திகதி திட்டமிடப்பட்ட சர்வோதய அபிவிருத்தி நிதி நிறுவனத்தின் ஆரம்ப பொது பங்குவழங்கல் முன்மொழிவைத் தொடர்ந்து இந்த நிகழ்வானது, முதலீட்டாளர்கள் மற்றும் தொடர்புபட்ட ஏனைய தரப்பினருடன் இடைத்தொடர்பாடல்களை மேற்கொள்ளவும், தேசமெங்கும் வாழ்வாதாரங்களை மேம்படுத்தல், தனி நபர்களுக்கு வலுவூட்டுதல் ஆகிய இறுதி இலக்குடன் தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினருக்கும் சமத்துவமான பெறுமதியைத் தோற்றுவிப்பதில் சர்வோதய அபிவிருத்தி நிதிநிறுவனத்தின் அர்ப்பணிப்பு குறித்து ஆழமான உரையாடல்களை நடத்துவதற்கும் ஒரு இணைப்புப் பாலமாக இந்நிகழ்வு வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளது.

இந்த முதலீட்டாளர் அமர்வில் நிறுவன முதலீட்டாளர்கள், தனிநபர் முதலீட்டாளர்கள் மற்றும் மனிதநேயத்தில் முதலீடு செய்வதில் ஆர்வமுள்ளவர்கள் என பல்வேறு வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகள், தேசிய வளர்ச்சியை மேம்படுத்துவதில் இலங்கையில் மிக வேகமாக வளர்ச்சி கண்டுவருகின்ற அபிவிருத்தி நிதிநிறுவனமான சர்வோதய அபிவிருத்தி நிதி நிறுவனத்தின் அர்ப்பணிப்புமற்றும் அதன் வெற்றிகரமான சரிதம் ஆகியவற்றைப் பற்றிய தெளிவான புரிதலைப் பெற இடமளித்தது.

சர்வோதய அபிவிருத்தி நிதிநிறுவனத்தின் முதலீட்டாளர் அமர்வின் நிறைவில் கருத்துத் தெரிவித்த அதன் தலைமை நிர்வாக அதிகாரியான நிலாந்த ஜயநெத்தி சமூக, பொருளாதார மற்றும் தேசிய அபிவிருத்தியை நோக்கி உழைப்பவர்களை இலக்காகக்கொண்ட முதலீட்டு வாய்ப்புகளுக்கான வலுவான விளக்கத்தை வழங்கி, இன்று எமது முதலீட்டாளர் அமர்வை வெற்றிகரமாக நிறைவுசெய்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த நிகழ்வில் கலந்துகொண்டவர்களால் இன்று பல மதிப்புமிக்க கேள்விகள் எழுப்பப்பட்டன. இவை அனைத்திற்கும் திருப்திகரமாக பதிலளிக்கப்பட்டது. இந்தவகையான முதலீட்டின் நம்பகத்தன்மை மற்றும் பலாபலன் குறித்து எந்த சந்தேகமும் இல்லை. இன்று நாங்கள் பெற்ற கருத்துகளின் அடிப்படையில், எங்கள் ஆரம்ப பொது பங்கு வழங்கல் நடவடிக்கை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து பரந்தளவிலான ஆர்வத்தைப் பெறும் என்று நாங்கள் நம்புகிறோம். சர்வோதய அபிவிருத்தி நிதிநிறுவனத்தின் ஒட்டுமொத்த முகாமைத்துவ அணியின் சார்பாக, பொருளாதார ரீதியில் முற்போக்கான சமுதாயத்தை உருவாக்குவதில், ஊக்கமளிக்கும் ஆர்வமுள்ள அனைவரையும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தொடர்புபட்ட அனைத்து தரப்பினருக்கும் சமத்துவமான பெறுமதியைத் தோற்றுவிப்பதை ஊக்குவிக்க விரும்புகிறேன் என்று குறிப்பிட்டார்.

## கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலை

தனியார் வீட்டினை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கானதும், கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் சலவை சேவைக்கானதுமான

### கேள்வி கோரல் - 2021

**கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான ஆர்வமுள்ளவர்களிடம் கீழ் குறிப்பிடப்படும் சேவைகளுக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.**

| தொ. இல | பெறுகை இல | கேள்விகள் | உத்தரவாத வைப்புப் பணம் (மீளளிப்பு செய்யக்கூடியது) செல்லுபடியாகும் காலம் 15.12.2021 - 15.01.2022 | மீளளிப்பு செய்யப்படாத கட்டணம். |
|---|---|---|---|---|
| 01 | NP/DGH KDC/2021/G/70 | தனியார் வீட்டினை வாடகைக்கு பெற்றுக் கொள்ளல் | N/A | 500.00 |
| 02 | NP/DGH KDC/2021/G/75 | கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் சலவை சேவை | 50,000.00 | 1000.00 |

1. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இவ்வைத்தியசாலை அலுவலகத்தில் கிடைக்க பெறும் விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 24.11.2021 தொடக்கம் 15.12.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

2. கேள்விகள் 15.12.2021 ம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், பிராந்திய பெறுகைக்குழு ,மாவட்ட பொதுவைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி** எனும்முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு சேவைகளுக்குமான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

3. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும், நடைமுறைகள் தொடர்பான படிவத்தினையும், விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் மாவட்ட பொதுவைத்தியசாலை கிளிநொச்சி **(தொலைபேசி இல 0212285329/0212284111)** என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

4. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

தலைவர், பெறுகைகள் குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை,கிளிநொச்சி.

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1397
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2021.11.22
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,178,840/-
வெற்றி இலக்கங்கள்
26 53 57 76 U
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


ஜயோதா Jayoda
திகதி : 2021-11-22
வெற்றி வாரம் : 1787 | வர்ணம் : மஞ்சள்
சுப்பர் ஜக்போட்
ரூ. 28,020,560/-
வெற்றி இலக்கங்கள்
34 35 38 62 G
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,412,760/-
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 28,141,980/-
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி
திகதி : 2021-11-22
வெற்றி வாரம் : 3283
வர்ணம் : மஞ்சள்
சுப்பர் ஜக்போட் பரிசு வெல்லப்பட்டுள்ளது
ரூ. 2,506,356/-
வெற்றி இலக்கங்கள்
16 26 47 48
மேஷம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,936,436/-

சனிதா Shanida
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2021.11.22
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,641,820/-
வெற்றி இலக்கங்கள்
07 52 70 73 N
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1571
சீட்டிழுப்பு திகதி 2021.11.22
நிறம் ▶ ஊதா
தினம் ▶ திங்கட்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
I 15 18 45 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,929,440/-
அபிவிருத்தி லொத்தர் சபை

# பயண கட்டுப்பாடுகளை தளர்த்தியது அவுஸ்திரேலியா



கொரோனா காரணமாக அமுலில் உள்ள பயணக் கட்டுப்பாடுகளை அவுஸ்திரேலிய அரசு தளர்த்தி உள்ளது. இதன்பிரகாரம், டிசம்பர் 1 முதல் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் அவுஸ்திரேலியாவுக்குச் செல்லலாம்.

அவுஸ்திரேலிய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

கொரோனா தடுப்பூசி செலுத்தியவர்கள் அனைவரும் டிசம்பர் முதல் அவுஸ்திரேலியாவிற்கு வர அனுமதிக்கப்படுவர். இதன்படி வெளிநாட்டு மாணவர்கள், திறன் வல்லுனர்கள் உள்ளிட்ட தகுதியுள்ள 'விசா' வைத்துள்ளோர் அனைவரும் பயண விலக்கு கோரி விண்ணப்பிக்காமல் நேரடியாக அவுஸ்திரேலியா வரலாம். அவர்கள் புறப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன் கொரோனா பரிசோதனை செய்து பாதிப்பில்லை என்ற சான்று வைத்திருக்க வேண்டும். அவுஸ்திரேலியா வந்து இறங்கியதும் அந்தந்த மாகாணங்களில் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தும் விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

**தனிமைப்படுத்துதல்**

ஜப்பான், கொரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அவுஸ்திரேலியா விசா வைத்துள்ளோர் பயண விலக்கு கோராமல், தனிமைப்படுத்துதல் இன்றி வர அனுமதிக்கப்படுவர். இது தொடர்பாக மேலதிக மாற்றங்கள் பின் அறிவிக்கப்படும்.

# கொரோனாவால் ஐரோப்பிய நாடுகளில் 5 லட்சம் பேர் பலியாகலாம்

## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

கொரோனாவால் ஐரோப்பிய நாடுகளில் 5 லட்சம் பேர் பலியாகலாமென உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஐரோப்பிய நாடுகளில் மீண்டும் கொரோனா தாக்குதல் அதிகரித்துள்ளது.

இதனால் ஜேர்மனி, நெதர்லாந்து, ஆஸ்திரியா, பெல்ஜியம், பிரான்ஸ், செக்குடியரசு, சுலோவாக்கியா போன்ற நாடுகளில் தொற்று பரவல் மிக அதிகமாக உள்ளது.

பிரிட்டனில் ஒரே நாளில் 44 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதே போல ஜேர்மனியிலும் நோய் தாக்குதல் பல ஆயிரத்தை எட்டியுள்ளது.

இதன் காரணமாக பல நாடுகளில் ஊரடங்கு மற்றும் கட்டுப்பாடுகள் மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளன. ஊழியர்கள் வீட்டில் இருந்தே பணி செய்யும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்த கட்டுப்பாடுகளை ஏற்க மறுத்து பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். நெதர்லாந்து நாட்டில் இதனால் பெரிய கலவரமே வெடித்திருக்கிறது.

இந்த நிலையில் உலக சுகாதார நிறுவனத்தின் ஐரோப்பிய பிராந்திய இயக்குனர் ஹான்ஸ்க்லுக் கூறியதாவது:-

ஐரோப்பிய நாடுகள் முழுவதும் டெல்டா வகை வீரிய வைரஸ் பரவி வருகிறது. இதை உடனடியாக கட்டுப்படுத்தாவிட்டால் பெரும் ஆபத்து ஏற்படும். முகக்கவசம் அணிவது, கட்டுப்பாடுகளை பின்பற்றுவது மிக முக்கியம்.



குளிர்காலம் என்பதாலும், போதுமான அளவுக்கு தடுப்பூசி போடாததாலும் பரவல் அதிகரித்திருக்கிறது. எனவே தடுப்பூசி போடுவதை அதிகப்படுத்த வேண்டும். பொது சுகாதார நடவடிக்கைகளை கட்டாயமாக செயற்படுத்த வேண்டும். புதிய மருத்துவ சிகிச்சைகளையும் பின்பற்ற வேண்டும்.

கொரோனா வைரஸ் மீண்டும் ஐரோப்பிய நாடுகளில் உயிரிழப்பை அதிகப்படுத்தியிருக்கிறது. உரியளவில் அதை கட்டுப்படுத்தாவிட்டால் வருகிற மார்ச் மாதத்துக்குள் 5 லட்சம் பேர் உயிரிழக்கும் அபாயம் ஏற்படும்.

கொரோனா கட்டுப்பாடு விதிப்பது என்பது தனி மனித சுதந்திரத்தை தடுப்பது அல்ல. அதை அனைவரும் புரிந்து கொண்டு அரசின் கட்டுப்பாடுகளுக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

# சுவீடனுக்கு முதல் பெண் பிரதமர்?

## இன்று வாக்கெடுப்பு



சுவீடனின் புதிய பிரதமரைத் தேர்ந்தெடுக்க பாராளுமன்றத்தில் இன்று 24 ஆம் திகதி வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

நாட்டின் முதல் பெண் பிரதமராக நிதியமைச்சர் மக்டலெனா அன் டார்சன் தேர்வு செய்யப்படுவாரா என்பது இன்றைய தினம் தெரியவரும்.

சுவீடன் பிரதமராகவும், சமூக ஜனநாயக கட்சித் தலைவராகவும் இருந்த ஸ்டெஃபான் லோஃப்வென் அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்தார். இதையடுத்து, பிரதமர் பதவியை அவர் இராஜிநாமா செய்தார். அவருக்கு பதிலாக கட்சித் தலைவராக நிதியமைச்சர் மக்டலெனா அன் டார்சன் தேர்வு செய்யப்பட்டார்.

அடுத்த பிரதமராக அவர் தேர்வு செய்யப்படுவதற்கு பாராளுமன்றத்தின் ஆதரவைப் பெற வேண்டும். 349 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் 175 பேரின் ஆதரவு அவருக்கு தேவைப்படுகிறது. ஆளும் சமூக ஜனநாயக கட்சிக்கு இப்போது 100 உறுப்பினர்கள் உள்ளனர். அதன் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவையும் சேர்த்து 174 உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது. பெரும்பான்மைக்கு ஓரிடம் குறையும் நிலையில், எதிர்க்கட்சிகள் பிரிவால் மக்டெலனா அன் டார்சனுக்கு போதிய ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மக்டெலனா அன் டார்சனை பிரதமராக தேர்வு செய்வதற்கான வாக்கெடுப்பு இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளதாக பாராளுமன்ற அவைத் தலைவர் கடந்த திங்கட்கிழமை அறிவித்திருந்தார்.

# தென்கிழக்கு ஆசியாவில் ஆதிக்கம் செலுத்த மாட்டோம்: சீன ஜனாதிபதி கூறுகிறார்

தென்கிழக்கு ஆசியாவில் சீனா ஆதிக்கம் செலுத்தவோ, அதன் சிறிய அண்டை நாடுகளைத் துன்புறுத்தவோ செய்யாது என ஜனாதிபதி ஷி ஜின்பிங் தெரிவித்தார்.

தென்சீனக் கடலில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில், அதற்குப் பதிலளிக்கும் வகையில் ஆசியான் மாநாட்டில் ஷி ஜின்பிங் இவ்வாறு கூறினார்.

10 நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்புக்கும் (ஆசியான்), சீனாவுக்கும் உள்ள உறவின் 30 ஆவது ஆண்டைக் குறிக்கும் வகையில் காணொலி வழியாக திங்கட்கிழமை நடைபெற்ற மாநாட்டில் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் பேசியதாவது:

மேலாதிக்கம் மற்றும் அதிகார அரசியலை சீனா உறுதியாக எதிர்க்கிறது.



தனது அண்டை நாடுகளுடன் நட்புறவைத் தொடரவும், பிராந்தியத்தில் நீடித்த அமைதியை கூட்டாக வளர்க்கவும் விரும்புகிறது. மேலும், தென்கிழக்கு ஆசியாவில் ஆதிக்கம் செலுத்தவோ, சிறிய அண்டை நாடுகளைத் துன்புறுத்தவோ மாட்டோம் என்றார்.

தென்சீனக் கடல் பகுதி முழுமைக்கும் சீனா உரிமை கோரி வருகிறது. அதில் உள்ள பல சிறிய தீவுகளில் இராணுவ கட்டமைப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இக்கடல் பகுதி நாடுகளும் ஆசியான் உறுப்பு நாடுகளுமான மலேசியா, வியட்நாம், புருணே, பிலிப்பைன்ஸ் ஆகியவை தென்சீனக் கடலில் சீனாவின் ஆதிக்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தென்சீனக் கடலில் ஒரு மணல்திட்டுப் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள தனது இராணுவத்துக்கு பொருட்களை விநியோகம் செய்வதற்காக பிலிப்பைன்ஸ் நாடு இரு படகுகளை அனுப்பியது. அந்தப் படகுகளை சீனாவின் கடலோரக் காவல் படை கப்பல்கள் தடுத்து நிறுத்தி திருப்பி அனுப்பின.

ஆசியான் மாநாட்டில், இந்த சம்பவத்தை பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரொட்ரிகோ டுடேர்தே சுட்டிக்காட்டினார். அந்த மணல்திட்டை பிலிப்பைன்ஸுக்கு சொந்தமானது எனக் குறிப்பிட்ட டுடெர்தே, அப்பகுதியில் நடந்த நிகழ்வை வெறுப்பதாகவும், இதுபோன்ற நடவடிக்கைகள் கவலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார். எமது நாடுகள் மற்றும் நண்பர்கள் இடையிலான உறவு நன்றாக இல்லை எனவும் அவர் கூறினார்.

---

# மழை குழப்பிய நிலையில் மேற்கிந்திய அணி 9/224 ஓட்டங்கள்




இலங்கையுடனான முதல் டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் மதிய நேர உணவு இடைவேளையின் பின் மேற்கிந்திய அணி 9 விக்கெட் இழப்புக்கு 224 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் பெய்த கடும் மழை காரணமாக நேற்றைய மிகுதி நேர ஆட்டம் கைவிடப்பட்டது.

மேற்கிந்திய அணி இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2021 டெஸ்ட் உலக சாம்பியன்ஷிப்பின் கீழ் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகின்றது.

காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமான முதல் டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 386 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கை அணி சார்பில் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன அதிகப்படியாக 147 ஓட்டங்களை பெற்றார்.

பின்னர் பதிலுக்கு தனது முதல் இனிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்திய அணி போட்டியின் இரண்டாம் நாள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 113 ஓட்டங்களை பெற்றது.

இந் நிலையில் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று ஆரம்பிக்க மேற்கிந்திய அணியினர் மதிய நேர உணவு இடைவேளை வரை மேலும் 2 விக்கெட்டுகளை இழந்து மொத்தமாக 215 ஓட்டங்களை குவித்திருந்தனர்.

ஜோசுவா டா சில்வா 9 ஓட்டங்களுடனும், ரஹ்கீம் கார்ன்வால் 33 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

மதிய நேர உணவு இடைவேளையின் பின் மேற்கிந்திய அணி 224 ஓட்டங்களை பெற்றிருந்த போது ரஹ்கீம் கார்ன்வால் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க கடும் மழை பெய்தது.

பந்து வீச்சில் இலங்கை சார்பில் பிரவீன் ஜெயவிக்ரம மற்றும் ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், லசித் எம்புல்தெனிய, தனஞ்சய டி சில்வா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். இலங்கை அணி தற்போது முதல் இனிங்ஸில் 162 ஓட்டங்களினால் முன்னிலையில் உள்ளது.

# பாகிஸ்தான் செல்லுமா இந்தியா

## என்ன சொல்கிறது ஐ.சி.சி.



''சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்காக இந்திய அணி, பாகிஸ்தான் செல்வது சவாலான விடயம்'' என ஐ.சி.சி. தலைவர் கிரேக் பார்கிளே தெரிவித்தார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) சார்பில் 2024-2031 இல் உலகக் கிண்ணம் உட்பட பல முக்கிய தொடர்களை நடத்தும் நாடுகளின் பெயர் சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.

இந்தியாவில் 2026 இல் 'ரி -20' உலக கிண்ணம் (இலங்கையுடன் சேர்ந்து), 2031 இல் 50 ஓவர் உலக கிண்ணம் (பங்களாதேசுடன் சேர்ந்து), 2029இல் சம்பியன்ஸ் கிண்ணம் என மூன்று ஐ.சி.சி. தொடர்கள் நடக்க உள்ளன.

1996 உலக கிண்ணம் தொடருக்குப் பின், பாகிஸ்தானில் 2025ல் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் நடக்கவுள்ளது. ஆனால் 2009ல் இலங்கை வீரர்கள் சென்ற பஸ் மீது நடந்த தாக்குதலுக்குப் பின் இந்தியா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா உட்பட பல அணிகள் அங்கு செல்லவில்லை. தவிர 2008 மும்பை தாக்குதலுக்குப் பின் பாகிஸ்தான் உறவில் பாதிப்பு ஏற்பட, இந்தியா அங்கு செல்லவில்லை.

இதுகுறித்து ஐ.சி.சி., தலைவர் கிரெக் பார்கிளே கூறியது:

சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்காக இந்தியா அணி, பாகிஸ்தான் செல்வது என்பது சவாலான விடயம். இது எங்களுக்குத் தெரியும். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் புவி சார்ந்த அரசியல் பிரச்சினைகளை கட்டுப்படுத்த முடியாது. இரு நாடுகள் இடையிலான உறவை மேம்படுத்த கிரிக்கெட் ஒரு பாலமாக இருக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. தேசங்களை ஒருங்கிணைக்க விளையாட்டினால் முடியும். ஒருவேளை சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் இதற்கு கைகொடுக்குமானால் சிறப்பாக இருக்கும் என்றார்.

# எல்.பி.எல்.ரி -20 தொடரை நேரில் பார்க்க அனுமதி



லங்கா பிரீமியர் லீக் (எல்.பி.எல்.) ரி -20 கிரிக்கெட் தொடரினை இம்முறை நேரில் பார்வையிடுவதற்கு வரையறுக்கப்பட்ட ரசிகர்களுக்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் பதிவில் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்படி கடுமையான சுகாதார வழிகாட்டுதல்களின் கீழ் 2021 எல்.பி.எல். தொடரில் வரையறுக்கப்பட்ட பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

லங்கா பிரீமியர் லீக் போட்டிகள் டிசம்பர் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதன் முதற்கட்ட போட்டிகள் கொழும்பு, ஆர் பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளது, நொக்-அவுட் சுற்றுகள் ஹம்பாந்தோட்டை மைதானத்தில் நடைபெறும்.

2021 லங்கா பிரீமியர் லீக்கின் இறுதிப் போட்டிகள் எதிர்வரும் டிசம்பர் 23 அன்று நடைபெறும்.

இதேவேளை காலி சர்வதேச மைதானத்தில் நடைபெற்று வரும் இலங்கை - மேற்கிந்திய தீவுகள் இடையிலான டெஸ்ட் தொடரிலும் மட்டுப்படுத்தப்பட்ட பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அந்த பதிவில் உறுதிப்படுத்தியுள்ளார்.

Printed at 267, Raja Mawatha , Ekala , Ja-ela and published by Asian Media Publications (Pvt) Ltd. at No 185, Grand pass Road on Wednesday 24th of November 2021.